14th January 2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 14 | பக்கங்கள் - 13 | editor.uthayam@gmail.com

## உலகளாவிய ஆயுத மோதலுக்குள் இலங்கையை தள்ள அரசு முயற்சி

### ஒதுங்குமாறு 40 அமைப்புக்கள் வேண்டுகோள்

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

இலங்கையை உலகளாவிய ஆயுத மோதலுக்குள் தள்ளாமல் ஒதுங்கியிருக்குமாறு இலங்கை அரசாங்கத்தைக் கோரி 40 சிவில் சமூக அமைப்புக்கள் இலங்கை அரசுக்கு வேண்டுகோள்

02ம் பக்கம்பார்க்க...

# இந்த ஆண்டு ஹஜ்ஜுக்கு 40 இலட்சம் யாத்திரிகர்கள்



### கடந்த ஆண்டை விட இரு மடங்கு

### கல்லெறிவதற்கு நாடுகளுக்கு நேர ஒதுக்கீடு

### சவூதி அரசு விரிவான ஏற்பாடு

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கு 40 இலட்சம் யாத்திரிகர்கள் மக்காவில் திரள்வார்கள் என சவூதி அரேபியா தெரிவித்துள்ளது. புனித ஹஜ் ஏற்பாடுகளை ஆராய்வதற்காக

02ம் பக்கம்பார்க்க...

## அலவி மௌலானா சனசமூக நிலையத்தை ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாக்க பாராளுமன்றில் சஜித் குரல்



மருதானை சுதுவெள்ளையில் அமைந்திருக்கின்ற அலவிமௌலானா சனசமூக நிலையத்தை சிலர் ஆக்கிரமித்திருப்பது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் குரல் எழுப்பியுள்ளார்.

அப்பிரதேசத்தில் வாழ்கின்ற ஏழை மக்களின்

02ம் பக்கம்பார்க்க...

## இலங்கை பாராளுமன்றத்துக்கு தெரிவான வெளிநாட்டில் தொழில் புரியும் முதல் எம்.பி



பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்றுள்ள நயன ராசனதிலக்க இலங்கை பாராளுமன்றத்தில் முதலாவது வெளிநாட்டில் தொழில் புரியும் ஒருவராவார்.

வெளிநாட்டில் தொழில்புரியும் ஒருவர் இலங்கை பாராளுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ளமை இதுவே முதற் தடவையாகும். கடந்த வெள்ளியன்று தெரிவான இவர்

02ம் பக்கம்பார்க்க...

## தமிழரசுக் கட்சியின் தலைமைக்கு மும்முனைப் போட்டி

### 21ல் வாக்கெடுப்பு



தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்கு மும்முனைப் போட்டி நடைபெறுகின்றது.

எதிர்வரும் 21ஆம் திகதி திருகோணமலையில் நடைபெறவுள்ள தமிழரசுக் கட்சியின் பொதுக் கூட்டத்தில் கட்சியின் புதிய உத்தியோகத்தர் தெரிவு இடம்பெறவுள்ளது. இதுவரை காலமும் கட்சியின் தலைவராக

02ம் பக்கம்பார்க்க...

## அமானா வங்கி நடாத்திய

### “எமது எதிர்கால கனவு” கட்டுரை பரிசளிப்பு நிகழ்வு



அமானா வங்கி பாடசாலை மாணவர்களுக்கிடையே அகில இலங்கை ரீதியில் நடாத்திய “எமது எதிர்காலக் கனவு“ என்ற தலைப்பில் இடம்பெற்ற கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்வு அண்மையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கை நிலைபேறு அபிவிருத்திப் பேரவையின் பணிப்பாளர் நாயகம் சமிந்திரி சபரமாது


02ம் பக்கம்பார்க்க...

## கொள்ளுப்பிட்டி பள்ளிவாசலுக்கு விஷேட பரிபாலன சபை

### அதிரடியாக நியமித்தது வக்பு சபை

(அஷ்ரப் ஏ. சமட்)

கொள்ளுப்பிட்டி ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு புதிய 09 உறுப்பினர்கள் கொண்ட விசேட பரிபாலன சபை ஒன்றை வக்பு சபை நியமித்துள்ளது. இந்நியமனம் கடந்த வெள்ளிக்கிழமை



02ம் பக்கம்பார்க்க...



அமானா வங்கியில் வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

விதிமுறைகளும் நிபந்தனைகளும் பொருந்தும்*

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

அமானா வங்கி (PLC) ஆனது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கி ஆகும் | ஃபிச் ரேட்டிங்: RWN (lka) ஸ்திரமான நிலை

## இந்த...
(முன் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையிலிருந்து சென்ற ஹஜ் தூதுக்குழுவிடம் இது பற்றி விளக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டு ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக உலகிலிருந்து 20 இலட்சம் யாத்திரிகர்களே வருகை தந்திருந்திருந்தனர். இம்முறை அது இரட்டிப்பாக அதிகரிக்குமென சவூதி அரேபிய ஹஜ் கமிட்டி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இம்முறை ஹஜ் ஏற்பாடுகளில் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. மினாவில் தங்களுக்கு விரும்பிய கூடாரங்களை விலை கொடுத்து வாங்குவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று ஜமாரத்தில் கல்லெறிவதற்கு ஒவ்வொரு நாட்டுக்கும் வெவ்வேறு நேரங்கள் ஒதுங்கப்பட்டுள்ளன. அந்த நேரத்தில் மட்டுமே அந்த நாட்டு யாத்திரிகர்கள் கல்லெறிவதற்கு செய்வதற்கு முடியுமென்று தெரிவித்ததாக முஸ்லிம் சமய திணைக்களத்தின் பணிப்பாளர் பைசல் ஆப்தீன் தெரிவித்தார். ஹஜ் முன்னேற்பாடுகள் பற்றி ஆராய்வதற்காக சவூதி அரேபியா சென்றிருந்த தூதுக்குழுவினர் கடந்த 12 ஆம் திகதி தாயகம் திரும்பினர். புத்த சாசன கலாச்சார அமைச்சர் விதுல விக்கிரமநாயக்க தலைமையில் சென்ற தூதுக்குழுவில் அமைச்சர் ஏற்கனவே சீனாவிற்கு செல்வதற்காக சில தினங்களுக்கு முன் இலங்கைக்கு வந்திருந்தார். கடந்த ஆண்டை விட இம்முறை பல புதிய மாற்றங்களை சவூதி அரேபிய ஹஜ் அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளதாகவும் பைசல் ஆப்தீன் தெரிவித்தார்.

## இலங்கை...
(முன் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடைய உறவினராவார். எதிர்க்கட்சித் தலைவரின் மனைவியும், நயன வாசனதிலக்கவின் மனைவியும் உறவினர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. கடந்த பொதுத் தேர்தலில் 31,307 விருப்பு வாக்குகளை பெற்றிருந்த நயன வாசனதிலக்க, பதுளை மாவட்டத்தின் பிரபல சமூக சேவையாளரும், தனவந்தருமாவார். இலங்கை பாராளுமன்றத்தில் முதன்முறையாக வெளிநாட்டிலே தொழில்புரியும் ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராக வந்திருப்பது இதுவே முதற்தடவையாகும். இது தொடர்பாக வாசன திலக்கவிடம் கேட்டபோது, கட்டாயமாக இலங்கை பாராளுமன்றத்தில் வெளிநாட்டில் தொழில்புரிகின்ற இலங்கையர்கள் பலர் பாராளுமன்றத்தில் உறுப்பினர்களாக வரவேண்டியது அவசியமென தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவில் மெல்போர்ன் நகரில் நீண்ட காலம் பணிபுரிந்த இவர், பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு 31,307 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றவர்களில் அடுத்ததாக இருந்தார்.

பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்த சமிந்த விஜயசிறி பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்ததையடுத்து இவர் பாராளுமன்றத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பதவியை 90 மில்லியன் கொடுத்து எடுத்ததாக பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்து குறித்து கருத்து தெரிவித்த இவர், பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு இன்னும் சில மாதங்கள் இருக்கின்ற நிலையில் யாராவது அப்படி பணம் கொடுத்து பாராளுமன்ற உறுப்பினர் பதவியை பெறுவாரா என கேள்வி எழுப்பினார். பாராளுமன்றம் இன்னும் சில மாதங்களில் கலைக்கப்படவிருக்கும் போது ஏன் பெருந்தொகையான பணத்தை கொடுத்து இந்தப் பதவியை பெறவேண்டுமென்றும் வாசன திலக்க கேள்வி எழுப்பினார்.

தியத்தலாவையை பிறப்பிடமாகக் கொண்ட விவசாய குடும்பத்தில் பிறந்த வாசன திலக்கவின் தாயார் ஒரு ஆசிரியராவார். தந்தை சுகாதார பரிசோதகராவார்.

பண்டாரவளை சென்.தோமஸ் கல்லூரியில் ஆரம்பக் கல்வியை கற்று அதன் பிறகு சுவிட்சர்லாந்திற்குச் சென்று அங்கு ஹோட்டல் முகாமைத்துவப் பட்டதாரிப் பட்டத்தைப் பெற்றுள்ளார்.

இலங்கைக்கு வந்து ஹில்டன் ஹோட்டலில் ஒரு நிறைவேற்று உத்தியோகத்தராக இணைந்துள்ளார். இரட்டைப் பிரஜாவுரிமையை பெறுபவர் என்று கூறப்படும் வதந்தியை வாசன திலக்க மறுத்துள்ளார்.

(உதவி நிருபர் நிஹார்)

## அலவி...
(முன் பக்கத் தொடர்ச்சி)

தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற இந்த சனசமூக நிலையத்தை முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கித்சிறி ராஜபக்ஷவும், ஜனாதிபதி செயலகத்தில் இருக்கின்ற ஓர் உயரதிகாரியும் சில தேவைகளுக்கு பயன்படுத்த முற்பட்டிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

அப்பிரதேசத்தில் வாழுகின்ற வறிய மக்களது தேவைகளை நிறைவு செய்வதற்கு இருக்கின்ற அலவி மௌலானா சனசமூக நிலையத்தை வெளியார் ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## அமானா...
(முன் பக்கத் தொடர்ச்சி)

பிரதம பேச்சாளராக கலந்து கொண்டார். அவரை வரவேற்பதையும், வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஹம்சில் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவின் பிரதானி அஸீம், E-Tel வங்கி மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவின் உபதலைவர் சித்தீக் அக்பர் உட்பட பிரமுகர்கள் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்குவதையும் படங்களில் காணலாம். **(முழுமையான படங்கள் பக்கம் 06 உள்ளன)**

## கொள்ளுப்பிட்டி...
(முன் பக்கத் தொடர்ச்சி)

ஜனவரி 12ஆம் திகதி முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பதில் பணிப்பாளரான அலா அஹமட் கையெழுத்திட்டு அறிவித்துள்ளார்.

ஏற்கனவே தலைவராக கடமைவகித்த வர்த்தகர் முஸ்லிம் சலாஹுதீன் தெரிவிக்கையில் 2 நாட்களுக்குள் எங்களது சபை பொது கூட்டம் நடைபெற இருந்தது. அதில் உறுப்பினர்கள் கொண்ட புதிய சபையை தெரிவு செய்வதற்காக இருந்த சமயத்தில் வக்பு திணைக்களம் ஓர் விசேட சபை ஒன்றை நியமித்துள்ளது. இவ் புதிய உறுப்பினர்கள் விபரம் வெள்ளிக்கிழமை முஸ்லிம் சலாஹுதீன் அவர்களினால் அறிவிக்கப்பட்டது.

(1)எம்.ஏ.எம் சக்வான், (2)அப்துல் ரகுமான் ஹாரூன்,(3) ஏ.ஏ.எம். யாசீர், (4)எம்.எஸ்.எம். சஹாஸ், (5)ஜெஸ்மின் மன்சூர், (6)மொஹமட் ஏ. காதர், (7) றிசான் நசீர்.,(8) முன்னாள் மேயர் ஹுசைன் மொஹமட், (9)எம்.எச் ஒமர் ஆகியோர்கள் விசேட பரிபாலன சபை உறுப்பினர்களாக கொள்ளுப்பிட்டி ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு வக்பு சபையினால் நியமிக்கப்பட்டுள்ளது.

## தமிழரசுக்...
(முன் பக்கத் தொடர்ச்சி)

இருந்த மூத்த தமிழ் அரசியல்வாதியான பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் முதுமை காரணமாக தலைமை பதவியிலிருந்து ஒதுங்கிக் கொள்வதனையடுத்து இந்தத் தலைமை தெரிவு இடம்பெறவுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், எஸ்.ஸ்ரீதரன் மற்றும் முன்னாள் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் இப்பதவிக்காக போட்டியிடுகின்றனர். இதற்காக வாக்களிப்பதற்கு 325 பேர் தகுதி பெற்றிருப்பதாக தமிழரசுக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் போட்டியில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையில் இருப்பதாக சில தமிழ் அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## உலகளாவிய...
(முன் பக்கத் தொடர்ச்சி)

விடுத்துள்ளன.

சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை அமைப்பு, இலங்கை சுதந்திர ஊடக இயக்கம், தென்னாசிய சுதந்திர ஊடக அமைப்பு, தென்னாசிய பெண்கள் ஊடக அமைப்பு, சமூக கற்கைகளுக்கான சர்வதே நிலையம், கிறிஸ்தவ ஒருமைப்பாட்டு இயக்கம், மகளிர் வாலிப கிறிஸ்தவ இயக்கம், முஸ்லிம் மீடியா போரம் உள்ளிட்ட 40 சிவில் சமூக அமைப்புகள், வலையமைப்புகள் மற்றும் ஒன்றியங்கள் கூட்டாக இணைந்து அந்தக் கோரிக்கை மனுவை வெளியிட்டுள்ளன.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இனப்படுகொலையைத் தடுத்து இஸ்ரேலுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என தென்னாபிரிக்காவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள விண்ணப்பத்தைக் கீழே கையொப்பமிட்டுள்ள சிவில் சமூக அமைப்புகள், வலையமைப்புகள் மற்றும் ஒன்றியங்களாகிய நாம் ஆதரிக்கின்றோம்.

இஸ்ரேல் அரசு "காஸாவிலும் அதனைச் சூழவுள்ள இடங்களிலும் மேற்கொள்ளும் அதன் இராணுவ நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும்" எனக் கோரும் தென்னாபிரிக்காவின் நடவடிக்கை வரவேற்கத்தக்கது.

நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்ட விரிவான 84 பக்கங்கள் கொண்ட ஆவண சமர்ப்பித்தலில்,"இஸ்ரேல் இனப்படுகொலையை நிறுத்தி சமவாயத்தின் கீழான கடப்பாடுகளுக்கு அமைவாக, நடக்க வேண்டும்" எனத் தீர்ப்பளிக்குமாறு தென்னாபிரிக்கா சர்வதேச நீதிமன்றத்தைக் கோருகின்றது.

தென்னாபிரிக்காவின் சமர்ப்பித்தல் மீதான முதற்கட்ட விசாரணைகள் 2024 ஜனவரி 11ம் மற்றும் 12 ஆம் திகதிகளில் ஹேக்கில் உள்ள சர்வதேச நீதிமன்றத்தில் நடைபெற்றது.

நீதிக்கான சர்வதேச நீதிமன்றில் காஸாவுக்கான தென்னாபிரிக்காவின் முன்னெடுப்பு நம்பிக்கை தருகிறது.

காஸாவின் நிலைமை உலகின் மனச்சாட்சியை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. மனிதாபிமான அக்கறைகளை நிவர்த்தி செய்வதற்கான போர் நிறுத்தம் ஒன்றைக் கோரும் சர்வதேச அழைப்புகளை இஸ்ரேல் அங்கீகரிக்க மறுத்துள்ளமை காஸா மக்களை மிகவும் பாதிப்பிற்குள்ளாக்கக் கூடிய நிலையில் வைத்திருப்பது உறைய வைப்பதாக உள்ளது.

காஸா மக்கள் மற்றும் பொதுவாக பாலஸ்தீனர்களின் மனித உரிமைகளை நிலை நிறுத்த மறுத்து, ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற பல்வேறு அரசாங்கங்களும், அரசுகளுக்கிடையிலான அமைப்புகளும் தோல்வியுற்றுள்ளன.

காஸா விடயத்தில் மனித உரிமைகள் பிரச்சினையில் மேற்கத்தேய அரசாங்கங்கள் பெரும்பாலும் மௌனம் சாதிக்கின்றன.

தென்னாபிரிக்கா இந்தப் பிரச்சினையை சர்வதேச நீதிமன்றத்திற்குக் கொண்டு வருவதில் துணிச்சலை வெளிக்காட்டியுள்ளது.

இலங்கையும், காஸா நெருக்கடி தொடர்பில் வியத்தகு முறையில் வித்தியாசமான அணுகுமுறை ஒன்றினைக் கையிலெடுத்துள்ளது.

மேலும், 10,000 தொழிலாளர்களை இஸ்ரேலுக்கு அனுப்புவதற்கு இலங்கை துரிதமாக நகர்வுகளை மேற்கொண்டுள்ளது. விவசாயத் தொழிலாளர்களாகவும், கட்டுமானத் தொழிலாளர்களாகவும் செல்லும் இந்த மக்கள், மோதல் காணப்படும் ஆபத்து வலயங்களில் பணிக்கு அனுப்பப்படுவதற்கான அதிக சாத்தியம் காணப்படுகின்றது - என்றார்.



# செங்கடலுக்கு கப்பல் அனுப்பும் ரணில் அணிசேரா மாநாட்டுக்கு செல்வதேன்!

## பாராளுமன்றில் ஹக்கீம் காட்டம்



(எம்.என்.எம்.யஸீர் அறபாத்)

ஜனாதிபதி 18ம் திகதி அணிசேரா நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் செல்கின்றார்.

இந்நிலையில், இந்நாட்டின் அணிசேராக்கொள்கை என்ன? இஸ்ரேலின் தேவைக்காக ஹூதி கிளர்சியாளர்களை ஒழிப்பதற்காக இலங்கை கடற்படைக்குச் சொந்தமான கப்பலொன்றை அனுப்புவதாக இருந்தால், எதற்காக அணிசேரா நாடுகளின் மாநாட்டிற்கு எமது அரச தலைவர்கள் செல்கின்றனர் என (09) பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது ரவூப் ஹக்கீம் கேள்வி தொடுத்தார்.

பலஸ்தீன காஸாப்பகுதியில் அண்மைய நாட்களில் இஸ்ரேலின் மிலேச்சத்தனமான தாக்குதல்கள் உலக முஸ்லிம்களை மாத்திரமின்றி, கருணையுள்ளம் கொண்ட ஒவ்வொரு மனிதனையும் உலுக்கியுள்ளதைல் காண முடிகிறது.

இவ்வாறான இஸ்ரேலின் அரக்கத்தனத்தைக் கண்டித்து பலஸ்தீன காஸா விவகாரத்தில் நல்லதொரு முடிவை எதிர்பார்த்து தன்னாலான முயற்சிகளிலும் போராட்டங்களிலும் கலந்து கொள்வது மாத்திரமின்றி, பாராளுமன்றத்திலும் பலஸ்தீன விவகாரம் தொடர்பாக ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு காத்திரமாக இஸ்ரேலின் மிலேச்சத்தனமான தாக்குதல்களுக்கெதிரான தனது கண்டனத்தையும் ரவூப் ஹக்கீம் வெளியிட்டு வருகிறார்.

தேசிய ரீதியாக பலஸ்தீன விவகாரம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கவும் பலஸ்தீன காஸா மக்களுக்கு விடிவு ஏற்படும் வரை பாராளுமன்றத்திற்குச் செல்லும் போது பலஸ்தீன சால்வையை அணிந்து செல்வேன் எனக்குறிப்பிட்டார்.

சொன்னது மாத்திரமல்ல, பாராளுமன்றத்திற்கு பலஸ்தீன சால்வையை அணிந்து சென்று, பலரையும் பலஸ்தீன காஸா மக்களுக்கு ஆதரவாக பலஸ்தீன சால்வையை அணிய வைத்ததையும் காண முடிந்தது.

கடந்த பாராளுமன்ற அமர்வு முடிவடைத்தும் குறித்த சால்வையை அணிவதை நிறுத்துவார் எனப்பலரும் எதிர்பார்த்த நிலையில், புதிய ஆண்டிற்கான பாராளுமன்றம் ஆரம்பமான போது ரவூப் ஹக்கீம் பலஸ்தீன சால்வையுடன் தோன்றி இஸ்ரேலுக்கு ஆதரவாக இலங்கை கடற்படை கப்பல் அனுப்பப்படுவது தொடர்பாக கேள்வியெழுப்பிய நிகழ்வைப்பார்க்கும் போது ரவூப் ஹக்கீம் பலஸ்தீன விவகாரத்தில் உறுதியான கொள்கையில் இருப்பதைக்காண முடிகிறது.

பலஸ்தீன காஸா விவகாரத்தில் சர்வதேச சமூகத்தின் பார்வையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரும் மூத்த அரசியல்வாதியுமான ரவூப் ஹக்கீமின் பங்களிப்பு என்பது காத்திரமானதாகப் பார்க்கப்படுகிறது.

ஈரான் இஸ்லாமிய குடியரசின் தலைநகர் தெஹ்ரானில் கடந்த சனிக்கிழமை 23ம் திகதி நடைபெற்ற பலஸ்தீனம் தொடர்பான பல் நாட்டு உயர்மட்ட அரசியல் ஆலோசனை மாநாட்டில், ஈரான் நாட்டின் அழைப்பின் பேரில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் பங்குபற்றினார்.

இதன் போது, பலஸ்தீனத்தின் மீது இஸ்ரேல் மேற்கொண்டு வரும் மிலேச்சத்தமான தாக்குதலைக் கண்டித்தும் நிரந்தரத்தீர்வுக்கான அவசியம் குறித்தும் உரையாற்றியதைப்பார்க்கும் போது ரவூப் ஹக்கீம் பலஸ்தீன விவகாரத்தில் தீவிரமாக அதேநேரம் நேர்மையாகச் செயற்படுவதன் வெளிப்பாடாகவே காண முடிகிறது.

### பிரதி அதிபர் அஸ்வத்கான் காலமானார்

ஸ்ரீபாத ஆசிரிய பயிற்சிக் கல்லூரியின் பிரதி அதிபர் அஸ்வத்கான் காலமானார். இவர் பலாங்கொடையை பிறப்பிடமாகவும், மாவனல்லையை வசிப்பிடமாகவும் கொண்டவர். மாவனல்லையிலே இவர் காலமானார்.

இவரது நல்லடக்கம் நேற்றுமாலை மாவனல்லையில் இடம்பெற்றது.

**வாசகர்களே!**

உங்கள் பிரதேசத்தில் இடம்பெறவுள்ள விழாக்கள், பாடசாலை நிகழ்வுகள், பாடசாலை அறிமுகம், அரச, தனியார் விழாக்கள் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள், கலாசார நிகழ்வுகள், மத நிகழ்வுகள் எதுவாயினும் எமது பத்திரிகை ஊடாக முழுப் பக்கத்தில் பிரசுரிக்க முடியும்.

அவ்வாறு தேவையுடையோர் 071 89 666 13 எனும் இலக்கத்திற்கு அழைக்கவும்!

உதயம்







www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 JANUARY 14
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# மூன்று மாத நிறைவில் பலஸ்தீன் போர் எங்கு பயணிக்கின்றது?

பலஸ்தீன் போராட்டம் தொடங்கி மூன்று மாதங்களைக் கடந்துள்ளது. அந்தப் போராட்டத்தில் இஸ்ரேல் மூன்று மாதங்களைத் தாண்டிய நிலையிலும் தன்னுடைய இலக்கை அடைய முடியாத நிலையில் தட்டுத் தடுமாறுகிறது. ஒரு பக்கம் இஸ்ரேலுக்கு சார்பாக உள்ள அணி குறிப்பாக அமெரிக்கா, பிரித்தானியா, இத்தாலி, நோர்வே, பிரான்ஸ் அதேபோன்று சில அரபு நாடுகள் தங்களுடைய அரசியல் இராணுவ எதிர்காலம் பற்றி மிகவும் சிக்கலான நிலைமைக்கு உள்ளாகியுள்ளன. கிட்டத்தட்ட 23,700 அளவிலான மக்கள் இதுவரை பலஸ்தீனில் மரணித்துள்ளதோடு, 50 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இந்த யுத்தத்தில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். தற்போது இது சர்வதேச நீதிமன்றம் வரை சென்றுள்ளது. தென்னாபிரிக்கா கொண்டு வந்த இந்த செயற்பாட்டுக்கு இஸ்ரேல் ஆதரவு பெற்ற சில நாடுகள் தவிர உலகின் அநேகமான நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளமை முக்கிய விடயமாகும். தற்பொழுது நீதிமன்ற விசாரணைகளில் தீர்மானிக்கப் போவது வெறுமனே பலஸ்தீன் தொடர்பான தீர்ப்பு அல்ல. உலகத்தில் நீதி நிலைநாட்டப்படுமா இல்லையா என்பது தொடர்பான ஒரு தீர்மானமாகும். தற்செயலாக இந்த இடத்தில் சர்வதேச நீதிமன்றம் பிழையான தீர்மானத்தை எடுக்குமென்றால் அது சர்வதேச ஒழுங்கை பெருமளவில் குழப்புவதோடு, சர்வதேச ஒழுங்கின் அவசியத்தையும் இல்லாமல் செய்வதோடு, ஐ.நா உட்பட ஏனைய சர்வதேச நிறுவனங்கள் மீது மக்களுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் உள்ள நம்பிக்கை அற்றுப்போகும். சர்வதேச நிறுவனங்கள் பெரும்பாலும் அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. இந்த நிலையில் சர்வதேச நீதிமன்றம் என்னவகையான தீர்மானத்தை எடுக்கப் போகின்றது என்பது தொடர்பாக மொத்த மனித சமுதாயமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. மறுபக்கம் சர்வதேச நீதிமன்றம் இஸ்ரேலை யுத்தக் குற்றவாளியாக பிரகடனப்படுத்துமாகவிருந்தால் இஸ்ரேலுடைய அரசு, அதனுடைய இராணுவம் சர்வதேச ரீதியாக இழக்கும் ஒரு மிகப் பெரிய இழப்பாக அது காணப்படும்.

தென்னாபிரிக்க சட்டத்தரணிகள் தமக்கு சாதகமாக வாதங்களை முன்வைக்கும் போது இஸ்ரேல் பலஸ்தீனைக் குற்றஞ்சாட்டினாலும் அதற்கு நடவடிக்கை எடுக்க முடியாது. ஏனென்றால் ஹமாஸ் ஒரு இயக்கம். அது ஒரு நாடு அல்ல. எனவே சர்வதேச நீதிமன்ற சட்டத்தின் படி ஹமாஸுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது என்று தென்னாபிரிக்க சட்டத்தரணிகள் மிகவும் ஆணித்தரமாக தமது வாதங்களை முன்வைத்துள்ளனர். இந்த வழக்கு எந்த வகையிலான போக்கை எடுக்குமென்பது உலக நிறுவனங்களின் இருப்பை உறுதிப்படுத்துகின்ற ஒரு விடயமாகக் காணப்படுகின்றது. தற்பொழுது இந்தப் போராட்டம் மிகவும் சிக்கலான நிலையை அடைந்திருக்கின்றது. குறிப்பாக இஸ்ரேல் ஈரானிய இராணுவ தளபதிகளை கொலை செய்ததன் விளைவாக ஈரான் மறைமுகமாக பெருமளவு குவிந்த போரில் ஈடுபட்டிருப்பது உறுதி செய்யப்பட்டிருக்கின்றது. காஸாவில் ஏற்படும் இழப்பை விட இப்போது தென் லெபனானில் இஸ்ரேலுக்கு ஏற்படும் இழப்புகள் பெருமளவுக்கு அதிகரித்திருக்கின்றன. ஓவ்வொரு நாளும் ஹிஸ்புல்லா போராளிகள் இஸ்ரேலை நோக்கி தொடராக தாக்குதல்களை நடாத்தி வருகின்றனர். அதேபோன்று சிரியாவிலிருந்தும், ஈராக்கிலிருந்தும், ஜோர்தான் பகுதியிலிருந்தும் இஸ்ரேல் மீது ஈரான் சார்பான போராளிகள் தாக்குதலை நடாத்தி வருகின்றனர். இன்னொரு பக்கம் இஸ்ரேல் மீது மாத்திரம் தாக்குதல் நடத்தாமல் அமெரிக்க இலக்குகள் மீதும் தொடரான தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. கத்தாரில் 10 ஆயிரம் இராணுவ வீரர்கள் உட்பட அதேபோன்று சவுதி அரேபியா மற்றும் பெருமளவிலான மத்திய கிழக்கு நாடுகளிலும் அமெரிக்க இராணுவம் காணப்படுகின்றது. கூடுதலான இராணுவத்தினர் குவைத்திலும், அதேபோன்று கட்டாரிலும் காணப்படுகின்றனர். இரு நாடுகளிலும் தலா 10 ஆயிரம் வீதம் அமெரிக்க இராணுவத்தினர் காணப்படுகின்ற நிலையில், அமெரிக்கா 1991 ஆம் ஆண்டு யுத்தத்தின் மூலம் ஈராக்கில் நுழைந்ததன் பின்பு முதற் தடவையாக ஈராக்கிய அரசு அமெரிக்க படைகளை தமது மண்ணிலிருந்து வெளியேறுமாறு கூறியிருப்பது மத்திய கிழக்கினுடைய இராணுவ சமநிலையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தப் போவதாக விளங்குகின்றது. இன்னொரு பக்கம் ஈரான் சார்பான யெமனிய ஹூத்திகள் அல்லது அன்ஸாரிய அமைப்பினர் தொடராக இஸ்ரேலுக்கு சாதகமான கப்பல் நடமாட்டத்தை தடுத்து வருகின்றது. இதனால் இலங்கை உட்பட பல நாடுகள் செங்கடலில் கப்பல் உறுதிப்படுத்துவதாக கூறிச் சென்றாலும், இந்தத் தாக்குதல் அண்மைய நாட்களாக மிகவும் தீவிரமான கட்டத்தை அடைந்துள்ளது. குறிப்பாக அமெரிக்கா, நெதர்லாந்து மற்றும் பிரித்தானியா உட்பட இன்னும் சில நாடுகள் இணைந்து திடீரென யெமனின் மீது தாக்குதல் நடத்த ஆரம்பித்துள்ளமையும், அதற்குப் பதிலடியாக யெமன் அன்ஸாருல்லா போராளிகள் அல்லது ஹூத்திகள் அமெரிக்க இலக்குகள் மீதும், கப்பல்கள் மீதும் தாக்குதல் நடத்த ஆரம்பித்திருக்கின்றமை உலகளாவிய ஒரு பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தும் என்று பலரும் அச்சப்படுகின்றனர். குறிப்பாக செங்கடலில் மாத்திரம் தமது ஆதிக்கத்தை செலுத்திய ஹூத்திகள், அரேபிய கடல் மற்றும் சுவிஸ் கால்வாயிலும் தாக்குதல் நடத்துவோமென எச்சரித்திருக்கின்றமை ஒரு பிராந்திய யுத்தத்தை அல்லது சர்வதேச யுத்தத்தை நோக்கி நகர்வதாக காணப்படுகின்றது. மிகவும் அமைதியாக இருப்பதாக ஈரான் காட்டிக் கொண்டாலும், ஈரான் முற்றுமுழுதாக இந்த நிகழ்வுகளுக்குப் பின்னால் திட்டமிடுவது மிகவும் தெளிவானது. எனவே ஈரானுடைய இந்த செயற்பாடானது அல்லது யெமனினுடைய இந்த செயற்பாடு பலஸ்தீன போராட்டத்தை சர்வதேச மயப்படுவதுவதிலுள்ள சிக்கலின் முக்கியத்துவத்தை அதிகப்படுத்துவதோடு இந்த விடயம் மிகப் பெரிய சிக்கலான எதிர்காலத்தை உலகத்துக்குக் கொண்டுவரும் என்பது தெரியவருகின்றது.

தற்செயலாக அமெரிக்க தரைப்படையினர் யெமனினுள் நுழையுமாக இருந்தால் அந்தத் தரைப்படையினர் எவ்வாறு காஸாவில் இஸ்ரேல் தோற்கடிக்கப்பட்டதோ, அதேபோன்று யெமனிலும் தோற்கடிக்கப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. இன்னொரு பக்கம் குறிப்பாக இந்த அமெரிக்க எதிர்ப்பு சிறு சிறு குழுக்கள் அனைத்தும் ஒன்றிணைந்து தாக்குதல்களை நடாத்துவது அமெரிக்காவுக்கு பெரும் தலையிடியாக மாறியுள்ளது. இதேநேரம் அமெரிக்கக் கப்பல்கள் தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளமை முதல் தடவையாக அமெரிக்கா என்ற வல்லரசுக்கு சவால் விடும் ஒரு நிலைமையை தோற்றுவித்துள்ளது.

பலஸ்தீன போராட்டம் இந்த நிலைமையில் செல்கின்ற போது இன்னும் இரண்டு மாதங்களுக்கு இந்தப் போராட்டம் நீடிக்குமாக இருந்தால் அது சர்வதேச இராணுவ சமநிலையை மாற்றுவதோடு ஆபிரிக்க அரபு முஸ்லிம் நாடுகளில் பெருமளவிலான அரசியல் மாற்றங்கள் ஏற்படுவதற்கு காரணமாக அமைவதோடு, உலகளாவிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு பல நாடுகள் சிக்கலுக்குள்ளாகும் நிலை உருவாகும். எனவே அநேகமான சர்வதேச நாடுகள் குறிப்பாக ரஷ்யா, சீனா உட்பட இன்னும் பல நாடுகள் இந்தப் பிரச்சினைக்கு அவசரமாக தீர்வு காணப்படவேண்டுமென்ற நிலைப்பாட்டில் உள்ளன. இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா விரும்பினாலும், இல்லாவிட்டாலும் இரண்டு நாட்டுக் கோரிக்கைக்கு செல்வது தவிர்க்க முடியாத யதார்த்தமாக மாறி வருகின்றது.

# செஞ்சோற்றுக் கடன் தீர்க்கவா

## செங்கடலுக்கு இலங்கை கப்பல்?



சுஐப் எம்.காசிம்

இஸ்ரேல், காஸா மோதல்கள் மத்திய கிழக்கு அரசியலில் மாத்திரமன்றி சர்வதேச அளவிலும் நெருக்கடியை திணித்திருக்கிறது. நான்கு மாதங்களாகியும் வெற்றி, தோல்விகள் நிச்சயிக்கப்படாமல் தொடரும் யுத்தம் இது. இதனால், பல கோணங்களில் பலரையும் பாதிக்கிறது. இராணுவ, பொருளாதார, மனிதாபிமான மற்றும் அரசியல் ரீதியில் இந்தளவு இது பாதிப்பை ஏற்படுத்தும் என எவரும் நினைக்கவில்லை. எவரும் நினைப்பதை அல்லது நினைக்காததை எப்படி எழுத்தில் சொல்வதென வாசகர்கள் கருதலாம். மத்திய கிழக்கிலிருந்து பல்லாயிரக் கணக்கான தூரத்திலுள்ள நாடுகள், விமானத்தில் 12 மணி நேரம் பறக்க வேண்டிய தூரத்திலுள்ள வல்லரசுகளின் கவனங்களும் இந்த யுத்தத்தின் பக்கம் திரும்பியுள்ளதே! இதை கருத்திலெடுத்துத்தான் அந்நாடுகளின் நிலைமைகளை எழுதுகிறேன்.

நாட்டின் கிழக்கு மாகாணமளவுள்ள ஒரு நிலப்பரப்பு காஸா. 23 இலட்சம் மக்கள் வாழும் இங்கு இந்த யுத்தம் ஏற்படுத்தியுள்ள பாதிப்புக்கள் பல. இவ்வளவு சிறிய குட்டி நிலத்தில் எவ்வளவு பெரிய குண்டுகள் கொட்டப்படுகின்றன. வல்லரசுகளின் பலமும் தொழினுட்பத் திறனின் உச்சமும் பயன்படுத்தப்பட்டும் “காஸா என்ன லேசா?” என வல்லரசுகள் வாய்பிளக்கின்றன.

பிரதேச பின்புலம், பிராந்திய மூலை முடுக்குகளின் தெளிவு இன்னும் கெரில்லாப்பாணியிலான தாக்குதல்களுக்கு முன்னால் வல்லரசுகளின் பலம் கேள்விக்குள்ளான யுத்தங்கள் பல. இப்போது, இதே கேள்விக்குள்ளாகிறது இந்த யுத்தம். ஹமாஸின் இருப்பு இல்லாதொழிவது மத்தியகிழக்கு மன்னர்களுக்கும் மகிழ்ச்சிக்குரியதுதான். பகிரங்கமாக இந்த மகிழ்ச்சியை பகிர்ந்துகொள்ளுமளவுக்கு அங்கு நிலைமைகள் இல்லை. லெபனானில் ஹிஸ்புல்லா மற்றும் யெமனில் ஹூதி போன்ற அமைப்புக்கள் அதிரடியாகக் களமிறங்கியுள்ளதால், பிராந்தியப் போராக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு ஏற்படுவது மத்தியகிழக்கிலுள்ள அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நலன்களுக்கு ஆபத்து. முதலில் ஏற்படப்போவது பொருளாதாரப் பாதிப்புக்களே!

ஹமாஸ்/க்கு நேரடியாக உதவும் இயலுமை ஹூதிகளுக்கு இல்லை. இதனால், செங்கடல் மற்றும் பாரசீகக் கடல்களில் கெரில்லாப்பாணியிலான தாக்குதல்களை நடத்தி, இஸ்ரேலுக்கு வரும் உதவிகளைத் தடுக்கும் உபாயங்களை ஹூதி போராளிகள் கட்டவிழ்த்துள்ளனர். நிலத்தோடு தொடர்புள்ள பகுதிகளில் இஸ்ரேலைப் பின்வாங்கச் செய்ய ஹிஸ்புல்லா அமைப்பும் பதில் தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளது.

இவைகள், களநிலவரங்களை தளம்பச் செய்கின்றன. இத்தளம்பல்கள், இலங்கையையும் பாதிக்குமென அரசாங்கம் அச்சப்படுகிறது. செங்கடலூடாக வரும் சரக்குக் கப்பல்கள் தாக்கப்பட்டால் கொழும்பு துறைமுகம், இந்தியாவின் கொச்சின் துறைமுகம் பாகிஸ்தானின் லாஹூர் துறைமுகங்களின் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடையலாம். இந்நிலையில், இவ்விரு நாடுகளையும் முந்திக்கொண்டு இலங்கை கடற்படையை அனுப்புவது ஏன்? அணிசேரா கொள்கையைப் பின்பற்றும் இலங்கை அமெரிக்க ஆதரவு நிலைப்பாட்டிலா உள்ளது? உகண்டாவில் அணிசேரா மாநாடு நடைபெறவுள்ள நிலையில், ஹூதி அமைப்புக்கு எதிராக களமிறங்கி உள்நாட்டில் ஒரு தாக்குதலையா இலங்கை எதிர்பார்க்கிறது? 2019 தாக்குதலால் பெறப்பட்ட அரசியல் ஆதாயமா இதில் எதிர்பார்க்கப்படுகிறது? இஸ்ரேல் ஆதரவு நாடுகளின் கப்பல்களையே ஹூதி அமைப்பினர் தாக்குகின்றனர். இலங்கைக்கு ஏன் இதில் அவசரம்? 250 மில்லியன் செலவு செய்து இப்படியொரு ஏற்பாடு எதற்கு? தமிழக மீனவர்களின் ஊடுருவலையே கட்டுப்படுத்த இயலாதுள்ள கடற்படையா ட்ரோனர் விமானங்களில் தாக்கும் ஹூதியை கட்டுப்படுத்துவது?

இவ்வாறுள்ள விமர்சனங்களுக்கு அரசாங்கம் வழங்கும் பதில்களை மக்கள் பொருட்படுத்துவதாக இல்லை. அரசியலுக்காகவல்ல. பட்டினியாலும், விலைப்பட்டியல்களாலும் அல்லலுறும் மக்கள், 250 மில்லியன் செலவாவதை விரும்பாதுள்ளனர். ‘பசி வந்தால் பத்தும் பறக்கும்’ என்பதைப்போல, செங்கடலுக்கு கப்பலை அனுப்புவதிலுள்ள யதார்த்தம் பறந்துபோய்விட்டது.

ஹூதி அமைப்பினரின் கட்டுப்பாட்டில் செங்கடல் வந்தால், நாட்டுக்கு வரும் சரக்குக் கப்பல்கள் தென்னாபிரிக்க வழியாக வர நேரிடும். இவ்வாறு வருவது பொருட்களின் விலைகளை அதிகரிக்கும்.

பொருளாதார மீட்சிக்கு சர்வதேச ஒத்துழைப்பை நாடுவதால் பூகோள அரசியலுடன் இணங்கிச்செல்ல நேரிடுகிறது என்கிறது அரசாங்கம்.

மகா பராக்கிரம பாகு மன்னனுக்குப் பின்னர் கடற்படையை அனுப்புவதில் பெருமைப்படும் ரணில், இவையெல்லாவற்றுக்கும் மேலாக ஒன்றைச் சிந்திக்க வேண்டும். முஸ்லிம்களின் மத உணர்வுடன் தொடர்புள்ள மோதல் இது. தேர்தல்கள் நெருங்குவதால், செங்கடல் விடயத்தில் அவதானமான காய் நகர்த்தல்களே அவசியமென ரணிலுக்கு நெருக்கமான முஸ்லிம் தலைவர்கள் அறிவுறுத்துகின்றனர். ஐம்பதாயிரம் பலஸ்தீனர்களை அங்கவீனர்களாக்கி, 25000 பேரைக் கொன்றொழித்து மற்றும் மூன்று இலட்சம் வீடுகளைத் தரைமட்டமாக்கியுள்ள இஸ்ரேலை பாதுகாக்காமல், இலங்கையரை பாதுகாக்கும் விடயத்தில் ரணில் கவனம் செலுத்தட்டும்.



## வாசகர் கருத்து....


"உதயம்" ஓர் இடைவெளியை நிரப்பிய உணர்வைத் தருகிறது.
மாற்றங்களைப் புரிந்துகொள்ளாமலும் ,புரிந்துகொண்டாலும் விட்டுக்கொடுக்க விரும்பபாமலும் பின்னோக்கி இழுக்கும் சக்திகளும் இல்லாமலில்லை.
சர்வதேச , தேசிய , சமூக மட்டத்தில் பேசவேண்டிய விடயங்கள் நிறையவே உள்ளன.
மின்னிதழ்களை வாசிக்கும் ஆர்வம் பெருமளவு அதிகரித்துள்ளது.
"உதயம்" மெல்லமெல்ல நிமிர்வது தெரிகிறது.
"அருவிக்கரை"யும் இணைந்துள்ளது. மிக்க மகிழ்ச்சி.

– தி.கமால் –

# தமிழக முஸ்லிம் சிறைவாசிகள்; நீண்ட கால பரோலில் விடுவிப்பு

## முதல்வர் ஸ்டாலினுக்கு முஸ்லிம் லீக் நன்றி!

(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)



முஸ்லிம் சிறைவாசிகள் நீண்டகால பரோலில் விடுவிக்கப்பட்டுள்ளது முதல்வர் முக.ஸ்டாலினின் எல்லா சமுக மக்களையும் சமத்துவ பார்வையோடு அரவணைக்கும் பண்பை வெளிப்படுத்துகிறது என்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

"திராவிட மாடல்" நல்லாட்சி நடத்தும் தமிழக முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களிடம் தமிழக முஸ்லிம் சமுதாயத்தின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வந்த முஸ்லிம் சிறைவாசிகளின் நீண்டகால பரோல் இப்போது நடந்திருக் கிறது. அண்ணா பிறந்த நாளில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சிறைச்சாலையில் இருப்பவரை அறச்சாலையாக மாற்றி முன்னதாகவே விடுதலை செய்து மக்களின் ஏகோபித்த நன்மதிப்பை பெற்று வந்தார்கள்.

தந்தையைப் பின்பற்றி தனையனாகி தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களும் சிறைவாசிகளின் நன்னடத்தைஇ வயது மூப்புஇ உடல்நலக் குறைவு போன்ற அம்சங்களுடன் அவர்களின் நல்ல நடத்தையையும் கவனத்தில் கொண்டு சிறைக் கதவுகளை திறந்து அத்தகையவர்களை விடுவித்து அவர்களின் குடும்பங்களில் மகிழ்ச்சி பொங்க செய்து வருகிறார்கள்.

இந்த ஆண்டு பொங்கல் விழா நடக்கும் இத்தருணத்தில் மகிழ்ச்சி பொங்கக்கூடிய நற்செய்தியாக தமிழக முதல்வர் அவர்கள் சிறையில் வாடிய முஸ்லிம் சிறைவாசிகளையும்நீண்ட கால பரோலில் விடுவிக்க வழி ஏற்படுத்தி தந்திருக்கிறார்கள்.

சிறையில் வாடும் வயது முதிர்ந்த முஸ்லிம் சிறைவாசிகளை விடுவித்து உதவிட தமிழக முஸ்லிம் சமுதாயத்தின் சார்பில் பல்வேறு தருணங்களில் தொடர்ந்து கோரிக்கை எழுப்பப்பட்டு வந்துள்ளது.

2023 மார்ச் பத்தில் நடந்த இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய மாநாட்டில் பங்கேற்று நிறைவு உரையாற்றிய தமிழக முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களிடம் சிறைவாசி விடுதலை கோரிக்கை எழுப்பப்பட்டது. இன்றைய வக்பு வாரியத் தலைவர் எம். அப்துல் ரஹ்மான் அதற்கான மாநாட்டு தீர்மானத்தை முன்மொழிந்தார். அதை முஸ்லிம் சமுதாயமே ஏற்றுக் கொண்டு வரவேற்றது. முதல்வர் அவர்களும் ஆவண செய்திட உறுதியளித்து சென்றார்.

தமிழக முதல்வர் அவர்கள் அரசின் தீர்மானமே சிறைவாசி விடுதலையை கோரி ஆளுநர் பார்வைக்கு அனுப்பி வைத்தார். ஆனால் ஆளுநர் அது பற்றி எவ்வித கவனமும் செலுத்தவில்லை. ஆளுநருக்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பிலும் கோரிக்கை மனு அனுப்பப்பட்டது. அது பற்றியும் எவ்வித நடவடிக்கையும் இல்லை.

இந்த நிலையில் தமிழக முதல்வர் அவர்களிடம் சமுதாயம் சம்பந்தமான இப்பிரச்சனையை சமுதாய பிரதிநிதிகள் சந்தித்து மீண்டும் வலியுறுத்தினர். அதில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில முதன்மை துணைத் தலைவரும் இடம் பெற்றிருந்தார்.

தமிழக முதல்வர் அவர்கள் சமுதாயப் பிரதிநிதிகளின் உள்ளார்ந்த கோரிக்கையை ஏற்று நல்லதொரு முடிவு செய்து அறிவித்து சிறைவாசிகளின் நீண்ட கால பரோலுக்கு பேருதவி புரிந்திருக்கிறார். நீதிமன்றத்தை அணுகும் சிறைவாசிகளை நீண்ட கால பரோல் தந்து விடுவிப்புக்கு வழிகாட்டிய முதல்வர் அவர்களின் இந்த மனிதாபிமான பேருஉபகாரம் பல குடும்பங்களில் நெஞ்சில் பால் வார்த்திருக்கிறது. கண்ணீர் வடிந்து கொண்டிருந்த குடும்பங்களில் இப்போது ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுத்து இருக்கிறது. இதயபூர்வமாக தமிழக முதல்வர் அவர்களை இந்த குடும்பங்கள் மட்டுமல்ல சிறுபான்மை சமுதாயமே வாழ்த்திக் கொண்டிருக்கிறது.

கருணைக்கடலாகத் திகழ்ந்த கலைஞர் அரசை போலவே ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சி யும் நாட்டில் உள்ள ஒவ்வொரு வருக்கும் பெருஉபகாரம் செய்து வரும் பொற்கால ஆட்சியாகி வருகிறது. சிறைவாசிகளின் குடும்பங்கள் முதல்வரை வாழ்த்துகின்றன. தமிழக முஸ்லிம் சமுதாயம் ஒட்டுமொத்தமாக முதல்வரை இதயபூர்வமாக வாழ்த்திக் கொண்டிருக்கிறது. இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தமிழகத்தின் தங்கமான முதல்வருக்கு பொங்கும் புகழ் சேர்ப்பதற்கு என்றென்றும் தனது வாழ்த்தை தொடர்ந்து கொண்டிருக்கும் எல்லா சமூகத்து மக்களையும் சமத்துவப் பார்வையோடு அரவணைக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் மேலான எண்ணங்கள் மென்மேலும் சிறந்தோங்கிட எனது அன்பான வாழ்த்துக்களைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஹோரேதுடுவ முஸ்லிம் வித்தியாலய விளையாட்டு மைதான அங்குரார்ப்பண நிகழ்வு






(அஷ்ரப் ஏ சமட் )

பாணந்துறை, ஹொரேதுடுவை முஸ்லிம் வித்தியாலயத்தில் மாணவிகளுக்காக அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு மைதானத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு வியாழனன்று பாடசாலையின் கௌரவ அதிபர் முத்தலிப் தலைமையில் நடைபெற்றது.

குறித்த விளையாட்டு மைதானத்தினை தனது முழுமையான பங்களிப்புடன் அமைத்துக் கொடுத்தஇ இலங்கை முஸ்லிம் கல்வி முன்னோடிகளில் ஒருவரும் முஸ்லிம் பாடசாலைகளுக்கான முதலாவது கல்வி அதிகாரியுமான பேருவளையைச் சேர்ந்த மர்ஹூம் A.L.M.P மொஹம்மட் (பக்கீர் மாஸ்டர்) அவர்களின் புதல்வரும் சமூக சேவையாளருமான தேசகீர்த்தி அல்ஹாஜ் ஆ. ஜாபிர் மொஹம்மட் அவர்கள் பாடசாலை சமூகத்தினால் பொன்னாடை அணிவிக்கப்பட்டு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

குறித்த நிகழ்வின் சிறப்பு அதிதியாக களுத்துறை மாவட்டபாராளுமன்ற உறுப்பினர் கௌரவ லலித் எல்லாவல, கௌரவ அதிதிகளாக களுத்துறை கல்வி வலயத்தின் தமிழ் மொழிமூல பாடசாலைகளுக்கு பொறுப்பான உதவிக் கல்வி பணிப்பாளர் இல்யாஸ், சமூக விஞ்ஞான பிரிவுக்கு பொறுப்பான பிரதி கல்விப் பணிப்பாளர் ஜெயகுமார் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

# இனிப்பும் கசப்பும்

வைஸ்

## பள்ளிச் சொத்து பறிபோவதேன்?

பள்ளிச் சொத்துக்களையும், மத்ரஸா சொத்துக்களையும், மக்கள் அபகரிக்கும் நடவடிக்கைகள் அண்மைக் காலங்களில் அதிகரித்து வருகிறது. முன்னைய காலங்களில் வேற்று மதத்தினர் இவ்வாறு பள்ளி, மத்ரஸா சொத்துக்களை அபகரிக்கும் நிலை இருந்தாலும் தற்போது இஸ்லாமியப் பெயரைக் கொண்டவர்கள் இந்த அபகரிப்புகளில் ஈடுபடுகின்றர். சில முன்னோஉகள் அல்லாஹ்விடம் நன்மை நாடி பள்ளி மத்ரஸ ாக்களுக்கு வக்பு செய்த சொத்துக்களை அவரது பின் வந்த பரம்பரையினஉ தனது நன்மைக்காக அபகரித்துக் கொள்ளும் அவல நிலை பரவலாக இருக்கிறது. பள்ளிகள் மத்ரஸாக்கள் வாங்கிய காணிகளும் அபகரிக்கப்படுகின்றன. உரிமைகளும், கோரப்படுகின்றன.

பள்ளிகளுக்கு மத்ரஸாக்களுக்கு சொந்தமான கடைகளுக்கு சிறிய வாடகையை கொடுத்துவிட்டு பள்ளி நிர்வாகிகள் வஉத்தகம் செய்கின்றனர். நிர்வாகிப் பதவி போனவுடன் அந்த சிறிய வாடகையை வாடகைச் சபைக்கு கட்டி விட்டு அநியாயம் செய்கின்றனர். பள்ளியோடு போரிடுகின்றனர். விதண்டாவாதம் செய்கின்றனர். சிலர் பள்ளிச் சொத்தை சிறிய தொகைக்கு வாடகைக்கு பெற்று அதனை பெரும் தொகைக்கு இன்னொருவருக்கு வாடகைக்குக் கொடுக்கின்றனர். அதன் மூலம் வீட்டிலிருந்து ஒன்றுமே செய்யாது வருமானம் பெறுகின்றனர். ஐம்பது வருடங்களுக்கு முன் கொடுத்த வாடகையை கொடுத்துக் கொண்டு இவ்வாறு பளிளக்கு சேர வேண்டிய பணத்தை அபகரிக்கின்றனர்.

இவ்வாறான சந்தர்ப்பங்களை அவ்வாறு ஏற்படுத்திக்கொள்ள பல காரணங்கள் இருக்கின்றன. இஸ்லாம் கொடுக்கல் வாங்கல்களை எழுத்தில் வைக்கும்படி அறிவுத்திய போதும் சில சொத்துக்கள் பற்றிய வாடகைப் பத்திரங்கள் எழுத்தில் இல்லை. வாய்ப்பேச்சில் உள்ளன. அநேகமாக பள்ளி மதரஸா சொத்துக்களை வாடகைக்கு பெறும் போது எழுத்து மூலமான ஒப்பந்தம் இல்லாமல் இருக்கிறது. வாய்ப் பேச்சில் உள்ளது. நிஉவாகிகள் எப்படியாவது மீண்டும் மீண்டும் பதவிக்கு வந்து கொள்வதால் தட்டிக் கேட்டி எவரும் இல்லாமல் போகிறது.

மற்றது பள்ளி, மத்ரஸா சொத்தக்களுக்கான உறுதிகள் அதாவது ஒப்பினைகள் சரியாக இல்லாது இருப்பது. அந்த உறுதிகள், ஒப்பினைகள் முறையாக வைத்திருக்காமையும் இல்லாது இருப்பதும் ஆகும். சில பள்ளிகளின் ஆரம்ப கால சொத்துக்கள் பிற்காலத்தில் புதிய பரம்பரைக்கு தெரியாமல் போவதும் சொத்து விடுபடவும் அபகரிக்கப்படவும் காரணமாகி விடுகிறது.

சில சொத்துக்களின் பத்திரங்கள் இருந்தாலும் எங்க இருக்கிறது எல்லைகள் என்ன என்பதை தேடிக் கொள்வதில் சிரமம் இருக்கிறது.

இவை எல்லாவற்றையும் விட முக்கிய காரணியொன்றுள்ளது. அதாவது பள்ளிகளின் பெயரில் சொத்துக்களை எழுதவோ வாங்கவோ முடியாத நிலையாகும்.

ஒருவஉ அல்லது ஒரு நிறுவனம் சொத்தை வாங்வதென்றால் அந்த நபரோ நபஉகளோ நிறுவனமோ சட்ட அந்தஸ்துக்ளின் அமைப்பாக இருக்க வேண்டும் என்பது எமது நாட்டின் சட்டமாகும். அதாவது நேரடியாக பளளியின் பெயருக்கோ மதிரஸாவின் பெயருக்கோ சொத்துக்களை பெறவோ வாங்கவோ முடியாது.

இதனால் அந்தந்தக் காலங்களின் இருந்த பள்ளி டிரஸ்டிமாரின் பெயரிலே சொத்துக்கள் வாங்கப் பட்டன. பெறப்பட்டன. பழைய பள்ளிகளின் உறுதிகளை பரிசீலித்தால் இது தெரியும் அங்கு டிரஸ்டிமாரின் இறந்தப் பின்பு பின் அந்த டிரஸ்டி மாரின் பேரப்பிள்ளைகள் அல்லது அவஉகளின் பேரப் பிள்ளைகளுக்கு அவர்களது மூதாதையின் வீட்டில் உறுதி கிடைத்தால் அது தனது மூதாதையின் சொத்து என்று நினைத்து உரிமை கொண்டாடுவர். பள்ளி அல்லது மையவாடி அல்லது மத்ரஸா அமைந்துள்ள காணிகள் தப்பிவிடும் தூ ரத்தில் எங்காவது இருந்தால் தனிப்பட்ட சொத்தாகி விடும்.

இதற்கு முக்கிய காரணம் பள்ளிகளின் மத்ரஸாக்களின் பெயஉகளில் சொத்து வாங்கி அல்லது பெற முடியாததாகும். அதாவது இந்த பள்ளி மத்ரஜா என்பன சட்ட அமைப்பாக (Legal Body) கருதப்படாமையாகும்.

வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் பௌத்த மதஸ்தலங்களும் இந்த சட்ட அந்தஸ்தை பெற்றிருக்கவில்லை. விகாரை சொத்து தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் நடந்த விஜேவர்தன எதிர் புத்தரக்கித தேரர் வழக்கில் பௌத்த விகாரைகள் சட்ட அந்தஸ்துள்ளது (Legal Body) அல்ல. எனவே, அதற்கு சொத்துக்களை வைத்திருக்க முடியாது என தீஉப்பளிக்கப்பட்டு பிரிவுக் கவுன்ஸில் அப்பீல் இதை உறுதிபப்டுத்தியது.

எனினும் பிற்காலத்தில் இது மாற்றப்பட்டது. ஓமாரே தஉமபால தேரர் எதிர் ராஜபக்ஸ கே பீரிஸ் என்ற வழக்கின்போது விகாரை என்பது தானாக உருவான நிறுவனம், இதற்கு சட்டத்தின் முன்னிலையில் சொத்துக்களை பெறவும், வைத்திருக்கவும் முடியும் எனத் தீஉப்பளிக்கப்பட்டது.

இங்கு விகாரைகள் சட்ட நிறுவனமாக இல்லை எனினும் சொத்துக்களை வைத்திருக்கலாம் என்ற தீர்ப்பு வந்தது. உயஉ நீதிமன்றத் தீர்ப்புகள் வழங்கப்பட்டால் அது சட்டமாகவே கருதப்படும்.

நாமும் இது பற்றி சிந்திக்க வேண்டும். செயற்பட வேண்டும். சொத்துக்கள் பள்ளிவாசல்களின் மத்ரஸாாக்களின் பெயரில் இருந்தால் தனிப்பட்ட எவருக்கும் எதையும் செய்ய முடியாது. எத்தனை பரம்பரை போனாலும் பொதுச் சொத்தாக பள்ளி மத்ரஸா சொத்தாகவே இருக்கும்.

இதற்கு ஒரே தீர்வு வக்பு சட்டதில் ஒரு சிறிய திருத்தத்தை கொண்டு வருவது தான். அரசாங்க திணைக்களத்தில் பதிவு செய்த பள்ளிகள் மத்ரஸாக்கள் சட்ட அந்தஸ்துள்ள அமைப்பு (Legal Body) என்று அரசியல்வாதிகள் மூலமாக அல்லது முஸ்லிம் கலாசார திணைக்களம் மூலம் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முயற்சிகளை எடுக்க வேண்டும். அதன் பின் தற்போது தனிப்பட்ட பெயஉகளில் உள்ள பள்ளி மத்ரஸா சொத்துக்களை பற்றி மத்ரஸா பெயர்களில் மாற்ற வேண்டும் உள்ள ஒரே வழி இதுவே. அத்தோடு காணிகளாயின் அளவீடு செய்யப்பட்டு எல்லை வரையறுக்கப்பட்டு எல்லைகளும் நிரந்தரமாக்கக் காட்டப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் பின் பெறப்படும் சொத்துக்கள் பள்ளி மத்ரஸா பெயரில் பெறப்பட வேண்டும்.

# அமானா வங்கி நடாத்திய

## “எமது எதிர்கால கனவு” கட்டுரை பரிசளிப்பு நிகழ்வு



































# யார் இந்த ஹூத்திகள்?



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

ஹூத்திகள் எனப் பொதுவாக அழைக்கப்படும் இவர்கள் தங்களை அன்சாரல்லாஹ் என்றே அவர்கள் தங்களை பெயரிட்டு அழைத்து கொள்கிறார்கள். அன்ஷ ரல்லாஹ் என்பதற்கு (கடவுளின் ஆதரவாளர்கள்"), என்று பொருள்படும். ஹௌதிகள் ஏமன் நாட்டில் இயங்கும் ஒரு இசுலாமிய ஆயுதக் குழுவாகும்.2004 ஆம் ஆண்டில் கடும் போக்குவாதத்தை ஆரம்பித்த உசைன் பத்ருதீன் அல்-ஹூத்தி என்பவரின் பெயரில் இருந்து இக்குழுவினர் ஹூத்திகள் என அழைக்கப்படுகின்றனர். 2004 செப்டம்பரில் இவர் யெமன் இராணுவத்தினரால் கொல்லப்பட்டார்.

அப்துல்-மாலிக் அல்-ஹூத்தி என்பவரின் தலைமையில் இயங்கும் இக்குழு 2014-2015 இல் யெமனில் இடம்பெற்ற ஆட்சிக் கவிழ்ப்பை வெற்றிகரமாக முடித்தது. தற்போது இக்குழு யெமன் தலைநகர் சனா மற்றும் ஏமன் நாடாளுமன்றம் ஆகியவற்றைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளது.

பொதுவாக ஹவுத்திக்கள் ஏமென் நாட்டை சேர்ந்த ஜியாதி இஸ்லாமிய பிரிவை சார்ந்தவர்கள்.இந்தி ஜியாதி மக்கள் அந்த நாட்டின் மக்கள் தொகையில் 25 சதவீதம் என்கிற அளவில் வாழ்கின்றனர். மீதமுள்ள 75 சதவீதமான மக்கள் சுன்னா இஸ்லாமிய பிரிவை சார்ந்தவர்களாக ஏமெனில் வாழ்ந்து வருகின்றனர். ஏமன் நாட்டில் 1,000 ஆண்டுகளாக ஜியாதி பிரிவை சார்ந்த ஆட்சியாளர்கள் தான் ஆட்சி செய்தனர்.அதாவது ஏமனில் 1962 ம் ஆண்டு வரை ஜியாதி பிரிவை சார்ந்தவர்கள் தான் ஆட்சி செய்தது குறிப்பிடத்தக்கது.

ஈரானிய ஆட்சியாளர்கள் பின்பற்றி அரசியல் செய்து வரும் ஜியாதி மத பிரிவை பின்பற்றி வரும் ஹொதிக்கள் இஸ்லாமிய நம்பிக்கை முற்றிலுமாக வேறுபட்ட ஒன்றாக அறிந்து கொள்ள முடிகிறது. பெரும்பாலும் இவர்களின் இஸ்லாமிய நம்பிக்கையின் அடித்துவமாக விளங்குவது ஹீசைன் அல் ஹீத்தி எழுதிய புத்தகத்தின் மூலம் தான் அறிந்து கொள்ள கூடியதாக அமைந்துள்ளது. அதாவது இவர்கள் பல்வேறு வகையான தத்துவங்கள் போதனைகளை பின்பற்றி வாழுகின்றனர். இந்த புத்தகத்தின் பெயர் மலேஷிம் என்று அழைக்கப்படுகிறது. இந்த மலேஷிஸ தத்துவத்தில் கொமேனியின் கொள்கை மற்றும் இஸ்லாமிய சகோதரத்துவம் ஆகியவை பொதிந்து காணப்படுகிறது. ஹீத்திகள் திருக் குர்ஆன் மொழிபெயர்ப்பை முழுமையாக நிராகரித்து விடுகிறார்கள். திருக்குர்ஆன் ஆன் மொழியாகக்கம் மோசமான சிந்தனைக்கு மக்களை உள்ளாக்கி பிரித்து விடுவதாக அவர்கள் நம்புகின்றனர். அதாவது இது போன்ற நிலை அடிப்படை இஸ்லாமிய கொள்கைகளுக்கு முரணாக இருப்பதாக அவர்கள் கூறுகிறார்கள். குறிப்பாக ஹவுத்திக்கள் தங்களை அஹ்ல் அல் பைத் என்றே கூறி வருகின்றனர். அதாவது இறைத்துதர் அவர்களின் வாரிசாக தங்கள் தான் ஆட்சியாளர்களாக திகழ முடியும் என்று கூறுகின்றனர். இது தான் தெய்வீக முறை என்றே அவர்கள் கூறுகிறார்கள். ஹொதிக்கள் அல்லது ஹவுத்திக்கள் சவூதி அரேபியாவின் சலஃபியிஸத்தை முழுமையாக வெறுக்கின்றனர். கடந்த பல ஆண்டுகளாக சலபி ஆட்சியாளர்கள் மூலம் ஜைதி சமூகத்திற்கு அநீதிக்கு உட்படுத்தப்பதாக கூறுகின்றனர். கடந்த பல ஆண்டுகளாக அல் கொய்தா இயக்கத்தினருக்கு எதிராக போரிட்டனர்.தற்போது அவர்களுடன் பல்வேறு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதாக தெரிகின்றது. பெண்களுக்கு அதிகாரம் மற்றும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்று கூறினாலும் பெண்ணுரிமை விடயத்தில் இவர்கள் மீது அடக்குமுறை பார்வை இருப்பதாக கூறப்படுகிறது.

தற்போது நிலையில் ஹொதிக்கள் ஈரான் ஆதரவுடன் செயல்படும் ஒரு கிளர்ச்சி குழ ஆகும்.இந்த குழு 2016 ம் ஆண்டு ஏமெனில் உள்ள சுன்னா இஸ்லாமிய அரசுக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்ட நிலையில் வடக்கு ஏமெனில் உள்ள பெரும்பான்மையான இடங்களை தங்கள் அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்தனர். ஏமெனில் உள்ள ஹீத்திகளுக்கு முழுமையாக ஈரான் ஆயுதங்களை சப்ளை செய்வதாக கூறி சவூதி அரேபியா மற்றும் அமெரிக்க படைகள் இணைந்து தாக்குதலை நடத்த அதற்கு பதிலடியாக ஹீத்திக்கள் திருப்பி தாக்குதலை தொடர சவுதி எண்ணெய் கிணறுகள் தாக்கப்பட்டு மிகுந்த சேதத்தை அந்த நாடு சந்தித்து போது தான் உலகம் மெதுவாக இவர்களை திரும்பி பார்த்தது.

ஹொதிக்கள் முழுமையாக தங்கள் எதிரிகளை அடையாளப்படுத்தும் இந்த வேளையில் தங்களின் பிரதான நோக்கத்தையும் அறிவித்து விட்டனர். அதன் படி தங்களின் பொது எதிரியாக அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் அதன் கூட்டாளியான சவூதி அரேபியா என்று அறிவிப்பு செய்து விட்டது. குறிப்பாக ஹொதிக்கள் தங்களுக்கு தேவையான ஆயுதங்கள் மற்றும் பயிற்சிகளை ஈரான் புரட்சி படையினரிடம் பெற்றுள்ளதாக தெரிய வருகிறது.. குறிப்பாக ஏமென் நாடு முழுவதையும் தனது கட்டுக்குள் கொண்டு வர வேண்டும் என்பதே அவர்களின் நோக்கமாக உள்ளது. அதே நேரத்தில் அமெரிக்காவின் கொள்ளைகளை எதிர் கொண்டு போராடும் அனைத்து சர்வதேச நாடுகள் மற்றும் குழுக்களுடன் பரஸ்பர புரிதலை ஏற்படுத்தி வருகிறார்கள்.

வடக்கு ஏமெனில் சாதா மாவட்டத்தில் ஷியா-ஜைதி சிறுபான்மைக் குழுவைச் சேர்ந்த ஹூதிகள் கடந்த பல ஆண்டுகளாக நிலைபெற்று வருகின்றனர். அதாவது தனது அதிகார வளை தள பின்னலை அவர்கள் அங்கு நிர்மாணம் செய்து உள்ளனர். அதே வேளையில் ஏமெனில் நடந்து வரும் உள்நாட்டுப் போருக்கு மத்தியில் கணிசமான சக்தியையும் செல்வாக்கையும் ஹீத்திக்கள் பெற்றுள்ளனர்.இவர்களின் வளர்ச்சி மற்றும் ராணுவ தளவாடங்களை ஈரானில் இருந்து பெறுவதாக சர்வதேச நாடுகள் நம்பும் அதேவேளையில், வலிமையான ஆயுத பலத்தை இவர்கள் பெற்றுள்ளனர்.இந்த வகையில் ஹொதிக்கள் இடம் பாலிஸ்டிக்( டீயடடளைவஉ ) வகை ஏவுகணையை ஹொதிக்கள் இடம் இருப்பது சர்வதேச பாதுகாப்பிற்கு மிகப் பெரிய சவாலாக அமைந்துள்ளதாக மேற்கு உலகமும் , அமெரிக்கா ஆதரவு படைகளும் அச்சப்படுகின்றது.

அல்மா ஆராய்ச்சி மற்றும் கல்வி மையத்தின் படி, ஆரம்பத்தில் புறக்கணிக்கப்பட்ட இவர்கள் 2010 களின் முற்பகுதியில் அரபு வசந்தத்தின் வேகத்தை பயன்படுத்தி தங்கள் நிலையை வலுப்படுத்தினர். 2014 ஆம் ஆண்டின் இறுதியில், அவர்கள் ஏமனின் தலைநகரான சனாவைக் கைப்பற்றினர், மேலும் பிப்ரவரி 2015 இல் அவர்கள் நாட்டின் மீது கட்டுப்பாட்டை தங்கள் பெற்று விட்டதாக அறிவிப்பு செய்தனர். அதேநேரத்தில் ஈரான் அரசின் ராஜ தந்திரம் மற்றும் தந்திரோபதாய ராணுவ நடவடிக்கைகளின் முகமாக உருவாக்கப்பட்ட ஹிஸ்புல்லாக்களை போன்ற வலிமையான படைகள் இவர்களிடம் இருந்து வருகிறது . சுருக்கமாக சொல்லப்போனால் லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லாக்களின் மறு பிரதிநிதிகள் தான் இவர்கள் என்பதே மிகச் சரியான புரிதல் ஆகும்.

ஈரானிய நாட்டின் ராணுவ செயல்பாடுகள் மற்றும் தொடர்ச்சியான பயிற்சிகளை பெற்ற ஹொதிக்களை அழித்தொழிக்கும் நோக்கில் சவூதி அரேபியா முன்வந்தது தாக்குதலை நடத்திய நிலையில் இது அந்த பிராந்தியத்தில் மிகுந்த பதட்டத்தை ஏற்படுத்தியது. இவர்களின் வலிமையான படை சுன்னா இஸ்லாமிய அரசான சவூதி அரேபியாவிற்கு எதிராக செயல்பாடுகளை கொண்டு செயல்பட்டு வருகிறது. குறிப்பாக சவுதி அரேபியாவின் கூட்டாளியான அமெரிக்கா ஏராளமான ஆயுதங்கள் சப்ளை செய்த நிலையில் தற்போது இரண்டு தரப்பிலும் அமெரிக்கா தயாரிப்பு ஆயுதங்களை தன் வசம் கொண்டுள்ளதாக நம்பப்படுகிறது. சர்வதேசத்தின் சட்ட திட்டங்களை ஏற்று செயல்படும் ஏமெனில் செயல்படும் அரசாங்கத்தை கவிழ்க்க இவர்கள் திட்டமிட்டு வருவதாக சவுதி அரேபியாவின் சர்வதேச பிரகடனமாக அமைந்துள்ளது.

குறிப்பாக, பாரசீக மற்றும் ஷியா முஸ்லீம் தலைமை நாடாக நாடான ஈரானும், சுன்னா முஸ்லீம் மற்றும் இஸ்லாத்தின் இரண்டு புனித நகரங்களான மக்கா மற்றும் மதீனாவின் தாயகமான சவூதி அரேபியாவும் பிராந்திய போட்டியாளர்களாக உருவாகியுள்ளன. 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இரு நாடுகளும் இராஜதந்திர உறவுகளை மீட்டெடுத்த அதே வேளையில், ஈரான் அணு ஆயுதங்கள் பெற்றுள்ள நாடாக மாறி வருவதும், மத்திய கிழக்கு பகுதியில் வலிமை பெற்று வரும் போராளி குழுக்களுக்கு தொடர்ந்து ஈரான் பல்வேறு உதவிகளை செய்து வருவதும் சவூதி அரேபியா மற்றும் அரபு எமிரேட்ஸ் நாடுகளை மிகவும் கவலை அடைய செய்துள்ளது.

ஹொதிக்கள் குறிப்பிடத்தக்க இராணுவ செயல்பாட்டின் மூலம் தங்கள் திறன்களை சர்வதேச நாடுகளுக்கு வெளிப்படுத்தியுள்ளனர், குறிப்பாக பாலிஸ்டிக் ஏவுகணைகள், கப்பல்களை தாக்கும் சக்தி வாய்ந்த ஏவுகணைகள் மற்றும் ஆயுதமேந்திய ஆளில்லா வான்வழி வாகனங்கள் (ருயுஏள) ஆகியவற்றைப் பயன்படுத்துவதில் மிகவும் திறமையான சக்தியாக அவர்கள் மாறி வருவது தான் அமெரிக்காவின் ராணுவ தலைமைக்கு மிகுந்த பதட்டத்தை உருவாக்குகி வருகிறது.அண்மை காலங்களில் சவுதி அரேபியாவிற்கு எதிராக வலிமையான தாக்குதலை நடத்தியது ஹொதி போராளிக் குழுக்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகளையும் இவர்கள் தாக்கியுள்ளதையும் நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அக்டோபர் 7 ஆம் தேதி ஹமாஸ் இஸ்ரேலுக்கு எதிரான போரைத் தொடங்கியதில் இருந்து ஹொளதிக்கள் முழுமையாக ஹமாஸ் அமைப்புடன் இணைந்து தங்கள் இராணுவ செயல்பாடுகளை இஸ்ரேலிய நாட்டிற்கு எதிராக தொடர்ந்து நடத்தி வருகிறார்கள்.இதன் தொடர்ச்சியாக ஏவுகணைகள் மற்றும் தற்கொலை ட்ரோன்கள் மூலம் இஸ்ரேலை தொடர்ந்து அவர்கள் தாக்கி வருகின்றனர். அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிய வான் பாதுகாப்பு சாதனங்களை கொண்டு ஏமெனில் இருந்து முழு பலத்துடன் ஹொதிக்கள் ஏவிய நீண்ட தூர ஏவுகணைகள் தாக்குதலை இஸ்ரேல் கட்டுப்படுத்தியுள்ளது. இந்த நிலையில் ஹொதிக்களின் போராளி குழுக்களை அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இராணுவ தலைமை தீவிரவாத குழுக்களாக அறிவிப்பு செய்து உள்ளது. எந்தவொரு நிலையிலும் தாங்கள் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிய படைகளை தாக்குவதற்கு முனைப்புடன் செயல்பட்டு வருவதாக அறிவிப்பு செய்தது அந்த பகுதியில் மிகப்பெரிய பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது மட்டுமல்லாமல் செங்கடல் முழுமையாக இராணுவ பகுதியாக மாறி வருகிறது. ஆகவே, செங்கடல் ஒட்டிய பிராந்திய போராக ஓட்டம் எடுத்து பின்னர் சர்வதேச போராக மாறி விடுமோ என்று பலர் அஞ்சும் சூழல் காணப்படுவதில் நமக்கு எந்த ஒரு ஆச்சரியமும் இல்லை .

அமெரிக்கா மற்றும் இஸ்ரேவேல் தேசத்தின் மரணம் உறுதி செய்யப்பட்டது . அல்லாஹ் ஒருவனே என்கிற கோஷத்துடன் முழுங்குவது என்பதே இவர்கள் அடிப்படை தாரக மந்திரமாக இருக்கின்றது. குறிப்பாக ஹமாஸ் படைகளைத் தாக்குகிறோம் என்று கூறி விட்டு பாலஸ்தீனத்தில் அப்பாவி பொதுமக்கள் 22,000 பேரை தொடர்ந்து ஈவு, இரக்கம் இல்லாமல் கொன்று குவித்து வரும் இஸ்ரேல் நாட்டிற்கு எதிராக மிகப் பெரிய அளவில் பொருளாதார முடக்கம் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வது தான் ஹொதி படைகளின் பிரதான நோக்கம் மற்றும் செயல்பாடாக அமைகிறது.

துருக்கியில் இருந்து 50

தொடர்ச்சி 08ம் பக்கம் பார்க்க....



# ஓட்டமாவடியில் சர்வதேச கராத்தே பயிற்சி நெறி





SKMS கராத்தே கழகத்தின் முதல்வர் சிஹான் வஹாப்தீன் மற்றும் USKU -EP கராத்தே சங்கத்தின் கறுப்புபட்டி மாணவர்கள் குழாமினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்விற்கு ஜப்பான் நாட்டில் இருந்து வருகை தந்திருந்த கராத்தே நிபுணர் ஹன்ஷி கெனிச்சி புஃ காமிசு அவர்கள் மாணவர்களுக்கு பயிற்சிநெறியை வழங்கியதோடு சர்வதேச சான்றிதழ்களையும் மாணவர்களுக்கு வழங்கிவைத்தார்.

இந்நிகழ்வில் ஓட்டமாவடி,வாழைச்சேனை, செம்மண்ணோடை,மட்டக்களப்பு ,நிந்தவூர் மற்றும் பொத்துவில் பிரதேசங்களிலிருந்து மிகவும் ஆர்வத்துடன் மாணவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக முன்னாள் கிழக்கு மாகாண ஆளுனரான கலாநிதி MLM.ஹிஸ்புல்லாஹ்வும் சிறப்பு அதிதிகளாக கல்குடா தொகுதி முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளரும் உயர்பீட உறுப்பினருமான ஹபீப் றிபான், அல்கிம்மா நிறுவனப் பணிப்பாளர் அஷ்ஷெஹ் MS.ஹாறூன் (ஸஹ்வி) ,USKU கராத்தே சங்கத்தின் பிரதம போதனாசிரியர் ZA.ரவூப், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஆஆ.ஹனீபா, அக்கீல் அவசர சேவை பிரிவின் தலைவர் MAC நியாஸ் ஹாஜி, VSKA கராத்தே சங்கத்தின் போதனாசிரியர் விஜயகுமார், JKMO சங்கத்தின் சிரேஷ்ட ஆசிரியர் சில்வா மற்றும் துமுகு கராத்தே சங்கத்தின் கிழக்குமாகாண போதனாசிரியர் புஷ்பராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இந்நிகழ்வின் இறுதி அம்சமாக தேசிய, மாகாண கராத்தே போட்டிகளில் வெற்றியீட்டிய வீரர்களை கௌரவப்படுத்தியதோடு அதிதிகள் மற்றும் ஞமுஆஞ கறுப்புப் பட்டி ஆசிரியர்களுக்கான நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

பல தசாப்தங்களாக சோட்டோக்கன் கராத்தே விளையாட்டு ஓட்டமாவடி பிரதேசத்தில் பிரசித்தி பெற்ற ஒன்றாக திகழ்வதோடு அதனை கௌரவிக்கும் நிகழ்வாக ஜப்பானிய கராத்தே நிபுணரை அழைத்து வந்து இந்நிகழ்வினை SKMS. ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் திறன்பட நிறைவு செய்திருந்தனர்.

# நெயினாக்காடு பிரதேச மக்களுக்கு அ.இ.ம.க.வினால் சமைத்த உணவு



கிழக்கு மாகாணத்தில் பொழிந்த அதிக மழை வீழ்ச்சியினால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் பல்வேறு பிரதேசங்கள் பாதிப்புக்கு உட்பட்டதனால் மக்கள் பல்வேறு அசௌகரீகங்களை சந்தித்து வருகின்றனர்.

குறிப்பாக சம்மாந்துறைப் பிரதேசத்தில் நெயினாக்காடு பகுதியில் வசிக்கும் மக்கள் வெள்ளப்பெருக்கினால் அதிகமாக பாதித்துள்ளதுடன் மக்கள் இருப்பிடமின்றி பாடசாலைகளில் முகாமிட்டு தங்க வைக்கப்பட்டு வருகின்றனர்.

இதனைக் கருத்திற்கொண்ட அகில இலங்கை மக்கள் காங்கிரசின் சம்மாந்துறை இளைஞர்கள் அமைப்பினர், நேற்று (13) சனிக்கிழமை நெயினாக்காடு பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு சமைத்து, பொதியிட்டு அவர்கள் இருக்கும் இடத்தைத் தேடிச் சென்று சமைத்த உணவை வழங்கினர்.

மிக குறுகிய காலத்திற்குள் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் சம்மாந்துறை இளைஞர்கள் காங்கிரஸின் தலைமை அமீர் அப்கனானின் உடனடி நடவடிக்கைகளுக்கு அமைவாக இவ் ஏற்பாடு செய்யப்பட்டது.



இந்நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அம்பாரை மாவட்ட செயலாளர் காதர், முன்னள் பிரதேச சபை உப தவிசாளர் அச்சி முகம்மட், உறுப்பினர்களான ரியாஸ், மற்றும் ஜிப்ரி (சலீம் வட்டானை) சிரேஷ்ட உறுப்பினர்களான நபீல், ஹனீபா,மன்சூர்,அன்வர் மற்றும் இளைஞர்கள் காங்கிரஸ் அமைப்பின் உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

07ம் பக்கத் தொடர்ச்சி...

பணியாளர்களுடன் இந்தியா நோக்கி வந்த “கேலக்ஸி லீடர்” என்கிற சரக்குக் கப்பல், ஏமன் நாட்டின் செங்கடல் பகுதியில் ஹவுதி கிளர்ச்சியாளர்களால் கடத்தப்பட்டது. ஹொதிக்கள் இஸ்ரேலிய பொருளாதாரத்தை அழித்து விட திட்டமிட்டு தான் செங்கடல் பகுதியில் வரும் இஸ்ரேல் சரக்கு கப்பல்களை மட்டுமே தாக்கி நாசப்படுத்தி வருகின்றனர். அதே நேரத்தில் தங்களின் இலக்கு ஏனைய நாட்டின் கப்பல்களை தாக்குவது அல்ல மாறாக பாலஸ்தீனத்தில் வாழும் அப்பாவி பொதுமக்களை படுகொலை செய்து வருகின்ற இஸ்ரேல் நாட்டின் பொருளாதாரத்தை முற்றிலுமாக அழித்து விடவே நாங்கள் முயற்சி செய்கிறோம் என்று வெளிப்படையாக இவர்கள் அறிவிப்பு செய்து விட்டனர்.. இந்த நிலையில் அமெரிக்கா தங்களின் கூட்டாளியான இஸ்ரேலிய நாட்டை காப்பாற்றி கரை சேர்க்க வேண்டும் என்கிற எண்ணத்துடன் கூட்டு படைகளை அமைத்து தாக்குதலை தொடர்ந்து வருகின்றனர்.. அமெரிக்கா செங்கடல் பகுதியில் தனது ஆதிக்கத்தை விரிவுபடுத்தி கடுமையான சிக்கலில் தவித்து கொண்டு இருக்கும் இஸ்ரேவேல் தேசத்தை காப்பாற்ற தன்னால் ஆன மிக கடுமையான முயற்சிகளை செய்து வரும் நிலையில் அவர்களுக்கு துணையாக பல்வேறு தேசங்களை அழைத்து கொண்டு இருக்கிறது . இந்த நிலையில் ஐரோப்பிய யூனியன் மற்றும் நேட்டோ நாடுகளிடம் இணக்கம் இல்லாத காரணத்தினால் அமெரிக்கா இந்த விடயத்தில் கடுமையாக சிக்கி தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையில் சேர்ந்து செயல்பட வேண்டும் என்று அமெரிக்கா தங்களது ராணுவ கூட்டாளிகளிடம் வேண்டுகோள் வைத்த போதும் சர்வதேச நாடுகளில் பெரும்பாலான நாடுகள் இணைய மறுத்து விட்டது. ஆஸ்திரேலியா தமது படைகளை அனுப்ப திட்டமிட்டு மறுத்து விட்டது என்பது குறிப்பிடத்தக்கது.. குறிப்பாக நேட்டோ படையில் இரண்டாவது வலிமையான படையாக இருக்கும் துருக்கி எந்தவொரு நிலையிலும் இஸ்ரேல் நாட்டிற்கு ஆதரவாக அதாவது பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவை வழங்கி வந்து கொண்டு இருக்கும் ஹொதிக்களை ஒழிக்க மறுத்து ராஜதந்திர ரீதியாக காய்களை நகர்த்தி வருவதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். . அதேநேரத்தில் இத்தாலி, பிரான்ஸ் படைகள் தாங்கள் படைகளை செங்கடல் பகுதிக்கு அனுப்பி வைக்க இயலாது என்று கையைப் விரித்து விட்ட நிலையில் அமெரிக்கா தனது நேசத்திற்கு உரிய தேசமான இஸ்ரேல் நாட்டை காப்பாற்றி விட எல்லா விதமான முயற்சிகளிலும் இறங்கி களமாடி வருவதை காண கூடியதாக அமைந்துள்ளது.. இந்த நிலையில் ஹொதிக்களின் நடவடிக்கைகளை தடுக்க இலங்கை தங்கள் நாட்டின் கப்பல் படைகளில் 100 வீரர்களை அனுப்பி வைப்பதாக அமெரிக்காவிடம் ரணில் விக்கிரமசிங்க அரசு உறுதி அளித்துள்ளதையும் அறிந்து கொள்ள கூடியதாக இருக்கிறது.

இது போன்ற சூழலில் அன்ஷ ரல்லாஹ் என்கிற ஹொதிக்கள் பல்வேறு தாக்குதலை செங்கடல் பகுதியில் நிகழ்த்தி இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஹொதிக்கள் செங்கடல் பகுதியில் நடத்திய தாக்குதலுக்கு அச்சப்பட்டு உலகின் மிகப்பெரிய கப்பல் நிறுவனமான மாஸ்க் தங்களின் கப்பல் சேவையை முழுமையாக நிறுத்தும் சூழல் உருவாகியுள்ளது.ஹொதிக்கள் வீசும் ட்ரோன்கள் , ஏவுகணைகளை இடைமறித்து தாக்குதலை தொடர்வதாக அமெரிக்கா கூறி கொண்ட போதிலும் இது ஒரு நீண்ட கால பிரச்சினை என்பது தான் உண்மை. உண்மையில் இந்த போரின் விளைவாக பல்வேறு செய்திகளை உலகம் அறிந்து கொள்ள கூடியதாகவே அமைந்தது.இஸ்ரேல் மற்றும் அமெரிக்க என்கிற வல்லாதிக்க சக்திகள் அனைத்தும் ஹமாஸ், ஹொதி மற்றும் ஹிஸ்புல்லாக்கள் என்கிற வலுவான கூட்டணி மூலமாக தகர்த்து எறியப்பட்டுள்ளதாக அறிந்து கொள்ள கூடியதாக அமைந்துள்ளது.ஹொதிக்கள் ஏமென் நாட்டின் வடக்கு பகுதியில் ஆதிக்கம் செலுத்தும் நிலையில் 2000 கிலோமீட்டர் அப்பால் இருக்கும் இஸ்ரேலிய நாட்டின் மீது நீண்ட தூர ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தி சர்வதேச நாடுகளின் கவனத்தை முழுமையாக திருப்பும் நிலை உருவானது பல்வேறு சரக்கு கப்பல்கள் தாக்குதலை எதிர்கொள்ள நேரிட்டது. செங்கடல் பகுதியில் பயணிக்கும் எந்தவொரு நாட்டின் வணிகம் சார்ந்த கப்பல்களை தாங்கள் தாக்குதலுக்கு உள்ளாக்கப் போவதில்லை என்று அறிவிப்பு செய்த ஹொதி படையினர் இஸ்ரேலிய நாட்டின் தொடர்புடைய அணைத்து வர்த்தக கப்பல்களையும் தாக்கி அளிக்கப்போவதாக கூறுகின்றனர். இதனைத் தொடர்ந்து பலம் பொருந்திய கப்பல்கள் மீது தாக்குதலை அவர்கள் தற்போது தொடர்ந்து நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் அமெரிக்காவின் 11 நட்பு நாடுகள் இந்த விடயத்தில் தடுமாற்றம் கண்டு வருகிறது என்பதே சர்வதேச பார்வையாளர்களின் கருத்தாக அமைந்துள்ளது என்பதே நிதர்சனமான உண்மையாகும்.

தற்போதைய நிலையில் ஹொதிக்களின் வரம்பற்ற கடல் நோக்கிய தாக்குதலை சமாளிக்க முடியாமல் அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளிகளுக்கு பெருத்த தலைவலியை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. பொதுவாக இஸ்ரேலிய நாட்டில் மிகுந்த கடுமையான பொருளாதார சிக்கல்கள் காரணமாக நெத்தன்யாகுவிற்கு நாட்டின் போர் கால பணம் செலவுகளை சமாளிக்க இயலாமல் தடுமாற்றம் அடைந்துள்ளது. விலைவாசிகளின் ஏற்றத்தால் இஸ்ரேல் நாட்டின் உட்பகுதியில் பெஞ்சமின் நெதன்யாகுவிற்கு எதிரான மனநிலை பொது சமூகத்திற்கு மத்தியில் ஆழமாக வேறுன்றி வளர்ந்து வருவதை அரசியல் பார்வையாளர்கள் தெளிவாக சுட்டி காட்டி உள்ளார்கள். ஹொதிக்கள் இஸ்ரேலிய நாட்டிற்கு செல்லும் கப்பல்களை மட்டுமே தாங்கள் தொடர்ந்து தாக்க இருப்பதாக அறிவிப்பு செய்து உள்ளார்கள். செங்கடல் பகுதியில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக எகிப்தில் உள்ள சூயஸ் கால்வாய் மிகப் பெரிய அளவில் வருமானம் குறைந்து இருப்பதாக தெரிகிறது. இஸ்ரேல் நாட்டின் பொருளாதாரத்தை மட்டுப்படுத்த ஹொதிக்கள் எடுக்கும் மிகவும் கடுமையான தாக்குதல் காரணமாக சரக்கு கப்பல்கள் ஏறத்தாழ 3500. நாட்டிகல் அளவுக்கு ஆப்ரிக்க பகுதியைச் சுற்றி வருவதால் மிகுந்த இழப்புகளை இஸ்ரேலிய நாடு இனி வரும் நாட்களில் சந்திக்கும் என்றே தெரிகிறது. இதன் மூலம் மிகுந்த பொருளாதார இழப்புகளை அந்த நாடு எல்லா வகையிலும் சந்திக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

இதற்கிடையே பல வாரங்களாக ஹூத்தி தாக்குதல்கள் அதிகரித்துள்ளதால், மார்ஸ்க் உள்ளிட்ட பல கப்பல் நிறுவனங்கள் செங்கடலில் இருந்து தங்கள் கப்பல்களை திசைதிருப்பி, அதற்கு பதிலாக ஆப்பிரிக்காவை சுற்றி பயணிக்கும் நிர்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

.ஈரான் ஆதரவு கிளர்ச்சி குழுவான ஹூத்திக்கள் முதலில் இஸ்ரேல் போரை நிறுத்த வைக்கும் முயற்சியாக, காஸா மீது போர் தொடுத்துள்ள இஸ்ரேல் சார்ந்த கப்பல்களை மட்டுமே தாக்குவதாக அறிவித்திருந்தனர். ஆனால் தற்போது இது சர்வதேச பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் பிரச்சினை தொடங்கியது முதல் ஹொதிக்கள் தொடர்ந்து பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக போரிட்டு வரும் நிலையில் யூதர்கள் மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வாசல்களை முழுமையாக அடைக்கும் வரை தங்கள் போராட்டம் தொடரும் என்று அறைகூவல் விடுத்துள்ளனர் . சில நாட்களுக்கு முன் ஒரே நாளில் பல்வேறு தற்கொலை ட்ரோன்கள் மூலம் செங்கடல் பகுதியில் தாக்குதல் நடத்தி அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய படைகளை நிலை குலைய வைத்தனர். மிகுந்த ஆற்றலுடன் தாக்குதல் நடத்தி வரும் ஹொதிக்கள் நவீன ராக்கெட் மற்றும் ஆயுதங்களை கையாள மிகுதியாக பயிற்சி எடுத்து வந்துள்ளனர் என்பது தான் இந்த போரின் ஊடாக நாம் அறிந்து கொள்ள கூடியதாக அமைந்துள்ளது.

இதுவரையில் நடந்த போரில் ஆயிரக்கணக்கான பாலஸ்தீன பொதுமக்கள் படுகொலை செய்த இஸ்ரேலிய இராணுவம் தங்கள் ராணுவ வீரர்களை ஆயிரக்கணக்கான அளவில் இழந்து விட்டார்கள் என்பதே உண்மையாகும். இனி உலகத்தின் இருதி காலம் வரையில் யூதர்களுக்கு இருண்ட காலம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அடக்கு முறைகளை ஏவி பிறரை கொலை செய்து அவர்களின் வாழ்விடங்களை பறித்து கொண்ட இஸ்ரேலிய நாட்டிற்கும் அதன் மக்களுக்கும் இனி ஒவ்வொரு நாட்களின் இரவும் தூங்காத இரவாக விடியும் என்பதில் எந்த ஐயமும் இல்லை என்பதே உண்மையாகும்..

# பதுளையில் அபகரிக்கப்பட்டுள்ள 22 ஆயிரம் ஏக்கர் காணிகள்



ஏ.எச்.ஏ. ஹுஸைன்

(மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணி நிருவாகப் பாரபட்சம் தொடர் - 9

ஏறாவூர் முஸ்லிம்கள் குடிசை அமைத்துக் கொண்டு கால்நீட்டித் தூங்குவதற்கு ஒரு துண்டுக்காணி இல்லாமல் அவஸ்தைப்படும்போது ஏறாவூரைச் சுற்றியுள்ள, ஏறாவூர் மக்களுக்குச் சேரவேண்டிய சுமார் 400 - 500 ஏக்கர் காணிகள் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய இராஜாங்க அமைச்சருமான பிள்ளையானின் ரீ.எம்.வி.பி (தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள்) கட்சிக்காரர்களுக்கு நீண்ட காலக் குத்தகை என்ற போர்வையில் பகிர்ந்தளிக்கப்பட்டிருப்பதாக கிழக்கு மாகாணசபை முன்னாள் அமைச்சர் எம்.எஸ். சுபைர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கடந்த 2016ஆம் ஆண்டிலிருந்து குரலெழுப்பி வருகின்றார். மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப் பற்றுப் பிரதேச செயலகத்தில் 2016 நொவெம்பெர் 08ஆம் திகதி இடம்பெற்ற பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் கவனத்திற்கு சுபைர் இந்த விடயத்தை முன்வைத்தார்.

அவ்வேளையில் அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர்ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச செயலகத்தினால் காணி நிருவாகம் மேற்கொள்ளப்படும் மீராகேணி, மிச்நகர், ஐயங்கேணி போன்ற கிராமங்களில் உள்ள சுமார் 400 தொடக்கம் 500 ஏக்கர் காணிகள் கிழக்கின் முன்னாள் முதலமைச்சரான பிள்ளையானின் தலைமையில் இயங்கும் ரீ.எம். வி.பி. எனும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் உறுப்பினர்களுக்கு நீண்ட காலக் குத்தகை என்ற பெயரில் தலா 10 ஏக்கர் வழங்கப்பட்டுள்ளன.

இந்தக் கிராமங்களில் 4 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 10 ஆயிரம் முஸ்லிம் மக்கள் வசிக்கின்றார்கள்.

இங்கு இட நெருக்கடி, நிலமற்ற பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. விஷேடமாக இங்கு வாழும் மக்களுக்கான கல்வி, சுகாதாரம், பொழுதுபோக்கு, விளையாட்டு, வாழ்வாதாரம் என்பனவும் நிலமின்மையால் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

கல்வி, மற்றும் சுகாதாரம், வாழ்வாதாரம் மற்றும் பொதுத் தேவைகளுக்கு காணி இல்லாதிருப்பது பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ள போதிலும், அங்குள்ள காணிகளை பிள்ளையானின் கட்சிக்காரர்களுக்குப் பகிர்ந்தளித்திருப்பதானது பெருத்த அநியாயமாகும்.

மக்கள் நிலமற்ற நிலையில் சன அடர்த்தியோடு வாழ்ந்து கொண்டிருக்கும்போது ஒருவருக்கு 10 ஏக்கர் என்ற அடிப்படையில் ரீஎம்விபி கட்சிக்காரர்களுக்கு காணிகள் வழங்கியிருப்பதை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

எனவே, இந்த விடயம் குறித்து அதிக அக்கறை எடுத்து காணிகளை மீட்டு பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நலன்களுக்காக பயன்படுத்த ஆவன செய்ய வேண்டும்" என்று சுபைர் அப்போது வலியுறுத்தியிருந்தார்.

அப்போது அந்தப் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீரலி உட்பட மட்டக்களப்பு மாவட்ட தமிழ் சமூக நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர்.

ஆனாலும், அவர்கள் முஸ்லிம்களின் காணி விடயத்திற்கு முக்கியத்துவம் வழங்காமல் கிடப்பில் போட்டே வந்துள்ளார்கள். அல்லது அந்த விடயத்தை மறைத்து வந்துள்ளார்கள் என்பதே நிதர்சனமாகும்.

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணியில்லாப் பிரச்சினை தொடர்பாக கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் சுபைர் அன்று தொடக்கம் இன்று வரை அதீத அக்கறை எடுத்து வந்துள்ளார்.

அடி மட்ட அதிகாரிகள் தொடக்கம் ஆளுநர் உட்பட ஜனாதிபதிவரைக்கும் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்டுள்ள காணி அநீதிகளை அவர் தெரியப்படுத்தியுள்ளார்.

அதன் விளைவாக ஜனாதிபதி செயலகம், காணிச் சீர் திருத்த ஆணைக்குழு, காணி மறுசீரமைப்பு அமைச்சு, காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம், மாகாண காணி நிருவாகத் திணைக்களம் ஆகியவற்றிலிருந்து மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்திற்கு பணிப்புரைகள் அனுப்பப்பட்டிருக்கின்ற போதிலும் மட்டக்களப்பு மாவட்டச் செயலக அதிகாரிகள் முஸ்லிம்களின் காணி விடயத்தை தட்டிக் கழித்தே வருகின்றனர்.

ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலடங்கும் மட்டக்களப்பு - பதுளை வீதிப் பகுதியில் கோப்பாவெளி, தும்பாலஞ்சோலை, கரடியனாறு, இலுப்படிச்சேனை, உன்னிச்சை, உறுகாமம், சில்லிக்கொடியாறு, கித்துள். தோடிவில்சோலை, சிவத்தபோக்கடி, ஆயித்தியமலை, கெளுத்திமடு, ஆறாம்கட்டை, பாவற்கொடிச்சேனை, மரப்பாலம், வெட்டுவான், மாவடியோடை, கொம்பர்ரசேனை, கூமாச்சோலை, காசான்குடா, கொக்குக்குஞ்சிமடு, கொடுவாமடு, பளவெட்டுவான், மக்கிளானை, கருந்தானை, ஊரருகுவெல்லங்குடா, நேரக்குடா, தம்பானம்வெளி, சமுளங்குடா, மயிலவெட்டுவான், பாலாமடுவடக்கு, பாலாமடுதெற்கு, புதுவெளிக்குளத்துவெட்டை, சோனகர்வெட்டை, புலுட்டுமான்ஓடை, விற்பனமடு பன்குடாவெளி, சோக்கம்பி, பெரியபுல்லுமலை, குடுக்கையர்சேனை, நெடியபொத்தானை, பள்ளச்சேனை, மகிழவெட்டுவான், செவிடர்தீவு, எறும்புத்தீவு, பாலையடிச்சேனை பாலையடிக்குடா, வால்கட்டு, புத்தம்புரி, குசலான, குருவிச்சந்தி, வேம்புடவெளி, குளவிக்கூட்டாறு, ஆஸ்பத்திரிச்சேனை ஆகிய வயற் பிரதேசங்களில் ஏறாவூர் நகர பிரதேச செயலகப் பிரிவு எல்லைக்குள் வசிக்கும் முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகளும் காத்தான்குடி முஸ்லிம்களின் காணிகளுமாக சுமார் 22000 ஏக்கருக்கு மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட வயல் மற்றும் குடியிருப்பு நிலங்கள் உள்ளன. பதியப்படாத வயல் நிலங்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை. இவை இப்பொழுது முஸ்லிம்களிடமிருந்து அபகரிக்கப்பட்ட நிலையில் உள்ளன.



இந்தத் தகவலை ஏறாவூர் வரலாற்று ஆய்வு மையம் பதிவு செய்துள்ளதாக ஏறாவூர் ஸ்ரீலங்கா ஷெட் எனும் மனித சேவைக்கான நிறுவனத்தின் தலைவர் கே. அப்துல்வாஜித் தெரிவிக்கிறார்.

"பூர்வீகமாக பயிர்ச் செய்கையிலும், நெற் செய்கையிலும் ஈடுபட்டு கடந்த 1990ஆம் இடம்பெயரச் செய்யப்பட்ட மட்டக்களப்பு பதுளை வீதியை அண்டியுள்ள முஸ்லிம் விவசாயிகளின் காணிகள் தற்சமயம் அதிகாரிகளால் அபகரிக்கப்பட்டிருக்கின்றன என்று கூறும் கிழக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சர் சுபைர் இவ்வாறு வாழ்வாதாரத்துக்கு உதவிகரமாக இருந்த ஏறாவூர் முஸ்லிம் விவசாயிகளின் அபகரிக்கப்பட்ட காணிகளை மீட்டெடுக்க அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் ஒருங்கிணைந்த அரசியல் நடவடிக்கையும் போராட்டமும் தேவையாகவுள்ளது என வலியுறுத்துகிறார்.

"இந்த சமூக நன்மை கருதி ஒன்றிணையுமாறு வினயமாகவும் பகிரங்கமாகவும் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

வெறுமனே இந்த விடயத்தில் எவரும் தனித்து நின்று உரக்கக் குரல் கொடுத்து காணியை இழந்து, வாழ்வாதாரத்தையும் இழந்து கண்ணீர் சிந்தும் ஏழை விவசாயிகளின் குறைகளைத் தீர்த்து வைத்துவிட முடியாது.

காணிகளை இழந்து கடந்த 30 வருடகாலமாக அலைந்து திரியும் இந்த ஏழை விவசாயிகளிடத்தில் காணி உரித்துக்கான 3 வகையான ஆவணங்கள் அவர்களது கைவசம் இருக்கின்றன.



நாட்டின் ஜனாதிபதியால் கையொப்பமிட்டு வழங்கப்பட்ட சுவர்ணபூமி உறுதிப் பத்திரங்கள், காணி ஒப்பம், வருடாவருடம் புதுப்பிக்கின்ற மற்றும் வரி செலுத்துகின்ற ஆவணங்கள் ஆகியவையே விவசாயிகளின் கைகளில் உள்ளன.


1985 மற்றும் 1990ஆம் ஆண்டுகளில் இந்த விவசாயிகள் தமது பூர்வீக விவசாய நிலங்களிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டதின் பின்னர் அவர்களது காணிகள் அதிகாரிகளாலும் அரசியல்வாதிகளாலும் மிக சூட்சுமமான முறையிலே நன்கு திட்டமிட்டு அபகரிக்கப்பட்டுள்ளன.

அதனால் இன்றுவரை அந்த ஏழை விவசாயிகள் தமது வாழ்வாதாரத்திற்காகப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

எனவே, இந்த விடயத்தில் காணிகளை இழந்த விவசாயிகளுக்கு இப்பிரதேச அரசியல்வாதிகள் மற்றும் சட்டத்தரணிகள் முன்வந்து ஒருங்கிணைந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என வினயமாகக் கேட்டுக் கொள்கின்றேன்" என்கிறார் சுபைர்.

(மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணி நிருவாகப் பாரபட்சம் தொடர்... வரும் வாரமும் வரும்!)

# ஷேக் ஹஸீனாவை நேரில் வாழ்த்திய அலிஸாஹிர்!



மட்டக்களப்பு மாவட்ட பாரளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவருமான அலிஸ ாஹிர் மௌலானா , பங்களாதேஷ் பாரளுமன்றத் தேர்தலில் வெற்றியீட்டு ஐந்தாவது முறையாக பிரதமராக தெரிவாகியுள்ள ஷேக் ஹஸீனாவை டாக்காவில் அமைந்துள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து திங்கட்கிழமை (08) சந்தித்து வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இதன்போது பங்களாதேஷ் மற்றும் இலங்கைக்கு இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதில் தனது உறுதியான நிலைப்பாட்டை பிரதமர் ஹசீனா வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் இச் சந்திப்பின் போது, பங்களாதேஷின் செழுமைக்கு மட்டுமல்ல, அண்டை நாடுகளுடன் அர்த்தமுள்ள ஒத்துழைப்பை வளர்ப்பதற்கும் பிரதமர் ஹசீனாவின் அர்ப்பணிப்பானது மிகவும் ஊக்கமளிக்கிறது எனவும் அத்தகைய திறமை மற்றும் அர்ப்பணிப்பு கொண்ட தலைமைத்துவத்தைக் காணும் வாய்ப்பிற்காக தான் பெருமிதம் கொண்டவனாகவும் பிரதமர் ஹசீனாவின் வழிகாட்டுதலின் கீழ் தொடரும் முயற்சிகளின் சாதகமான பெறுபேறுகளைக் காண ஆவலுடன் காத்திருப்பதாகவும் அலிஸாஹிர் மௌலானா எம்.பி.தெரிவித்துள்ளார்.

---

# அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார்

## அமைச்சர் மனுஷ நாணயக்கார உறுதி



வாக்குகளை எதிர்பார்த்து எந்தொரு முடிவுகளும் எடுப்பது இல்லை இதுவரை எடுக்கப்பட்ட தீர்மானங்கள் யாவும் தேர்தலை குறிவைக்காமல் மக்களின் நன்மைக்காவும்,எதிர்கால பொருளாதார நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது எனவும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களே போட்டியிடுவார் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் கௌரவ மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

காலி ஹபராதுவ பிரதேச செயலகத்தில் நடைபெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பொருளாதரத்தை நிலைநாட்ட முடியும். எனவே, பொருளாதாரத்தை முன்னேற்ற நினைக்கும் அனைவரும் அவருடன் இணைந்து கொள்வர்.

எதிர்காலத்தில் எப்படி போட்டியிடுவது என்பதை நாங்கள் தீர்மானிப்போம் . எவ்வாறான ஏற்பாடுகள் இருந்தாலும் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயம் போட்டியிடுவார்.

தற்போதைய நிலையைப் போன்று ஒரு நிலை இருந்தாலும் நாங்கள் வாக்குகளுக்காக எந்தொரு நிவாரணங்களையும் வாங்கவில்லை .வாக்குகளை எதிர்பார்த்து இருந்தால் இவ்வாறு வரிகளை விதிக்க முடியாது. நாங்கள் இவ்வாறான முறைமையை மாற்றியமைக்கும் முயற்சியில் ஈடுபடுவதனால் சில வழக்கறிஞர்கள் எமக்கு எதிரே கோசம் எழுப்புகிறார்கள்.

ஆனால், நாட்டின் நலனுக்காக நாம் செய்யும் விடயங்களை ஒருபோதும் அரசியலாக்கியது இல்லை

நாங்கள் மீண்டும் பணத்தைச் அச்சடிக்கவில்லை , அதனாளே நாங்கள் வரியை விதித்து இருக்கிறோம் . இவை அரசியல் ரீதியாக பாதகமானவை. எனவே உள்ளவர்களிடம் வரியைப் பெற்று அனைவரும் வாழக்கூடிய சூழலை உருவாக்க நாங்கள் செயல்படுகிறோம்.

நாட்டின் பொருளாதாரம் மேம்படும் போது மக்களுக்கு வரி குறைக்கப்பட்டு நிவாரணம் வழங்கப்படும் .

மார்ச் மாதத்திற்குள் மின் கட்டணத்தை குறைக்க நடவடிக்கை எடுக்கின்றோம் . இங்கு

பொருளாதாரம் வலுவாக இருப்பதால்தான் சலுகைகள் வழங்கப்படுகின்றன.

மற்றபடி எந்தொரு நிலையிலும் தேர்தலை எதிர்பார்த்து சலுகைகளை வழங்கவில்லை

நான் கொடுப்பனவுகளை அதிகரிக்க விரும்பியதனாலே ஜனவரி முதல் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்த நடவடிக்கை எடுத்தேன், எனவே அதிகரித்த பத்தாயிரத்தை பிப்ரவரி முதல் வழங்க ஏற்பாடு செய்வோம் - என்றார்.



இலங்கையில் தமது பதவிக்காலத்தை நிறைவு செய்து கொண்டு விடைபெற்றுச் செல்லும் பாக்கிஸ்தான் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் உமர் பாரூக் புர்கி அவர்களுக்கு இலங்கை சுற்றுலா மற்றும் கைத்தொழில் மன்றத்தின் தலைவர் ஏ .எம் ஜவ்பரின் ஏற்பாட்டில், முஸ்லிம் ஹேண்ட் அமைப்பின் இலங்கை வதிவிட பிரதிநிதி ஏ.எம் மிஹ்லாரின் ஒத்துழைப்புடன் கொழும்பு சினமண்ட் கிராண்ட் ஹோட்டலில் செவ்வாய்க்கிழமை (09) நடைபெற்ற இராப்போசனத்துடனான பிரியாவிடை நிகழ்வில் SLMC ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் முக்கிய உரையொன்றை நிகழ்த்தியதோடு, உயர் ஸ்தானிகக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

---

## நானா நீயா அவனா ?



சபீர் மொஹமட்

# கொலையாளிகள் இல்லாத கொலைகள்!

கடந்த வாரம் ஞாயிறு நள்ளிரவுவரை ஒரு கட்டுரையை எழுதுவதற்காக தரவுகளை சேகரிக்கும் போது நான்கு கேள்விகளுக்கு பதில் கிடைக்காமலே நான் தூங்கிவிட்டேன்.

– 2006 ஆம் ஆண்டு எதற்காக இலங்கை இராணுவம் ஆறு ஆடைு-27 விமானங்களை உக்ரைன் நாட்டில் இருந்து கொள்வனவு செய்தது ?

– 2000 ஆம் ஆண்டு வெறுமனே 1.2 மில்லியன் டாலர் பெறுமதியில் இருந்த இந்த விமானங்கள் எப்படி 2006 ஆம் ஆண்டில் 2.4 மில்லியன் ஆனது ?

– இரு நாடுகளின் அரசாங்கத்திற்கு இடையிலான கொடுக்கல் வாங்களின்போது ஏன் இலங்கை அரசு இங்கிலாந்தின் “பெலிமிஸ்ஸ ஹோல்டின்” என்ற நிறுவனத்திற்கு பணம் வழங்கியது ?

– ஏன் இங்கிலாந்தில் “பெலிமிஸ்ஸ ஹோல்டின்” என்ற ஒரு நிறுவனம் குறித்து முகவரியில் அங்கே இருக்கவே இல்லை?

அன்று தூக்கத்தில் இருக்கும்போது என் கனவிலே லசந்த விக்கிரமதுங்க தோன்றினார். அவரது வலது கையிலே, ஒரு இரும்பு உள் காணப்பட்டது. அது வெளிநாட்டு பண்ணைகளில் ஆடு மாடுகளின் தலையில் வைத்தவுடன் தலையை துளைத்துக் கொண்டு உள்ளே சென்று அவற்றை கொலை செய்ய பயன்படுத்துகின்ற “போல்ட்” என்ற ஒரு ஆயுதம். அவர் இடது கையில் நீதி தேவதையின் தராசு ஒன்றை ஏந்தியவாறு என்னிடம் வந்தார். என் கைகளில் இருந்த பேனாவையும் ஸ்மார்ட் கையடக்க தொலைபேசியையும் பற்றியவாறு “இதே கேள்விகளை நானும் அன்று 15 வருடங்களுக்கு முன் கேட்டேன்” என்றார்.

பின்னர் நாம் இருவரும் ஒரு தேநீர் அருந்துவதற்காக பொரல்ல மயானத்துக்கு அருகே உள்ள ஒரு கடைக்குச் சென்றோம். அங்கே பொரல்ல மயானத்தில் லசந்தவின் பெயர் பொறித்த கல்லறையை சுட்டிக்காட்டி என்னிடம் நாளை ஜனவரி 8ஆம் திகதி இங்கும், இன்னும் சில அரசியல் மேடைகளிலும் நடக்கப் போகும் ஒரு நாடகத்தை நான் முன்கூட்டியே கூறவா ? என்றார்.

“2015 ஆம் ஆண்டு இப்போதைய உனது ஜனாதிபதி அப்போதைய எனது நண்பன் ரணில் விக்கிரமசிங்க உட்பட சிலர் நல்லாட்சி என்ற பெயரில் என் பெயரையும் என்னைப்போல் கொல்லப்பட்ட என் நண்பர்கள் சிலரின் பெயரையும் விற்று ஆட்சிக்கு வந்தார்கள். பின்னர் 2016ஆம் ஆண்டு செப்டம்பர் 27ஆம் திகதி என்னை அந்த குழியிலிருந்து வெளியே எடுத்தார்கள். கல்கிசை போலீஸ் நிலையத்தில் இருந்து காணாமல் போன ஆவணங்கள் முதல் கிருளப்பனை நீரோடையிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் வரை பல விடயங்களை அப்போது அவர்கள் கண்டுபிடித்தார்கள். ஆனால் சில நாட்களில் அதையும் அனைவருமே மறந்து விட்டார்கள். என் நண்பன் ஏதோ தேர்தல்கள் பற்றி கூறியுள்ளான் என கேள்விப்பட்டேன். நாளை நீ கொஞ்சம் செய்திகளைப் பார், என் நண்பனை தவிர அனைவரும் என்னை ஞாபகப்படுத்துவார்கள். உனக்கு நான் கூறுவதும் ஒரே உபதேசம் தான், “உன் உயிரை விட பெருமதியான செய்தி எதுவும் இல்லை” திடீரென எழுந்தேன். அது ஒரு கனவு !

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க கொலை செய்யப்பட்டு கடந்த ஜனவரி 8ஆம் திகதியுடன் 15 வருடங்கள் ஆகின்றன. லசந்த, ஊடக சுதந்திரத்தை வேண்டி நின்ற ஒரு பத்திரிகையாளன் அல்ல. அவர் ஊடக சுதந்திரத்தை தேடிச்சென்று அதற்காக போராடிய ஒரு குடிமகன். இலங்கையில் நிகழ்ந்த ஏனைய பல கொலை கொள்ளை காணாமல் ஆக்கப்படல் போன்றே, இதுவும் குற்றவாளி அற்ற ஒரு கொலையானது. இந்த சகல கொலைகளுக்குமான சாட்சியங்கள் மூலம் குற்றம்சாட்டப்படுவது, உத்தியோகபூர்வ ஒரு வட்டத்திற்குள் இருந்துகொண்டு செயற்படுகின்ற உத்தியோகபூர்வமற்ற கொலைக்கும்பல் ஒன்றினை ஆகும்.

லசந்தவின் கொலையுடன் தொடர்புள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மற்றும் 2009 ஆம் ஆண்டு பாதுகாப்பு செயலாளராக கடமையாற்றிய கோடாபய ராஜபக்ஷ மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. ஒருமுறை வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்று கோடாபயவிடம் லசந்த விக்ரமத்துங்கவின் மரணம் பற்றி கேட்கப்பட்டது. அப்போது கோடாபய

Why are you asking about Lasantha ?

Who is Lasantha ? Who is Lasantha ?

Tell me what's important to him ? என்ன திருப்பி கேட்டார்

நீகள் உங்கள் மனசாட்சியிடம் கேளுங்கள், இது போன்ற ஒரு கொலையை சாதாரண ஒரு மனிதனால் செய்ய முடியுமா?

இறுதியாக நீதிமன்ற விசாரணைகளில் உறுதியானதைப் போல் லசந்த இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டு இருப்பின், லசந்த போன்ற தனி ஒருவனை கொலை செய்ய இராணுவத்திற்கு உத்தரவு வழங்கும் அளவிற்கு பலம் பொருந்தியவர்கள் எங்கே இருப்பார்கள் ? அவர்கள் சாதாரண மனிதர்களாக இருக்க முடியுமா ?

இங்கே நாம் உற்று நோக்க வேண்டிய ஒரு சில விடயங்கள் காணப்படுகின்றன. லசந்த விக்ரமதுங்க நேரடியான ஒரு அரசியல் காரணத்திற்காக கொலை செய்யப்பட்டார். கொலை செய்யப்பட்ட பின்னரும் லசந்தவின் மரணமானது ஆட்சி மாற்றங்களை தீர்மானிக்கின்ற ஒரு நிர்ணயமாக அரசியல் மயப்படுத்தப்பட்டது. கடந்த எட்டாம் திகதி லசந்த் கொலை செய்யப்பட்டு 15 வருடங்கள் நிறைவடைந்ததை முன்னிட்டு பல அரசியல்வாதிகளும் தமது அனுதாபங்களை தெரிவித்திருந்தனர். அதிலே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ‘நாங்கள் ஆட்சிக்கு வந்தால் வசந்தவின் கொலையாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவோம்’ என்று கூற பொரளை மயானத்தில் இருந்து கொண்டு ஹர்ஷ டீ சில்வா, ‘லசந்தவின் மரணத்திற்கு நீதியை நிலை நாட்டுமாறு நாங்கள் ஜனாதிபதியை வலியுறுத்துகிறோம்’ என்கின்றார். மறுபுறம் ரவி கருணாநாயக்க, ‘லசந்தவின் கொலை குறித்த புலனாய்வுகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்’ என்று கூற அந்த மூவரிடமும் அந்த சந்தர்ப்பத்தில், நீங்கள் 2015ல் என்ன செய்தீர்கள்? என்ற ஒரு கேள்வியை கேட்கக்கூட முடியாமல் மனதளவில் எத்தனையோ ஊடகவியலாளர்கள் இறந்தும் இறக்காதது போல் கேமராக்களை ஏந்தியவாறு இருந்தார்கள்.

இலங்கையில் பதிவான முதலாவது ஊடவியலாளர் படுகொலை 1981 ஆம் ஆண்டிலே கொலை செய்யப்பட்ட விமல எஸ் சுரேந்திரகுமாருடைய மரணம் என 2017ஆம் ஆண்டு அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல ஒரு முறை பாராளுமன்றத்தில் குறிப்பிட்டு இருந்தார். ஊடக சுதந்திரத்திற்காக குரல் கொடுக்கின்ற நிறுவனங்களின் தரவுகளின் படி இலங்கையில் மொத்தமாக 44 ஊடகவியலாளர்கள் கொலை செய்யட்டும் காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளார்கள். அதிலே 41 தமிழ் பேசும் ஊடவியலாளர்கள் உள்ளமை வியப்புக்குரிய ஒரு உண்மையாகும்.

ஏற்கனவே கூறியது போல் ஏதோ ஒரு அரசியல் காரணத்திற்காக கொல்லப்பட்ட இந்த ஊடவியலாளர்கள் மீண்டும் மீண்டும் வெவ்வேறு அரசியல் காரணங்களுக்காக கொல்லப்படுகின்றார்கள். அதிலே ஒரு சில உயிர்கள் மீது கண்மூடித்தனமான கவன ஈர்ப்பொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதுவும் ஒரு அரசியல் தான் !

அரசியல் சமூக ஆய்வாளர்கள் ஊடகம் என்பது நவீன ஜனநாயகத்தின் ஒரு தூண் என்கின்றார்கள். உறுதியாக இருக்க வேண்டிய அந்த தூண் இன்று வலுவிழந்து உடைக்கப்பட்டு கொண்டு வருகின்றது. இதற்கு முந்திய வாரம் எழுதிய பத்தியில் கூறியது போல் இரு துருவங்களிலும் ஊடகங்கள் நெறிப்படுத்தப்படாமைக்கு திறமையான வசந்த, நிமலராஜன் போன்ற ஊடவியலாளர்களின் மரணமும் ஒரு காரணமே.

கொல்லப்பட்டது லசந்த் மட்டுமல்ல. கொல்லப்பட்டது பிரகீத் மட்டுமல்ல. கொல்லப்பட்டது சிவராம் மட்டுமல்ல. கொல்லப்பட்டது நிமலராஜன் மட்டுமல்ல. இத்தீவிலே வெவ்வேறு அரசியல் காரணங்களுக்காக வெவ்வேறு குழுவினரால் இரு துருவங்களிலும் ஜனநாயகத்தின் தூண்கள் உடைக்கப்பட்டுள்ளன. நீதிக்காக தமது இன்னுயிரை நீத்த ஊடகவியலாளர்களின் கொலைகளுக்கு ஏன் இன்னும் நீதி கிடைக்கவில்லை ?

அவற்றுடன் சம்பந்தப்பட்டவர்களை தண்டிக்க முடிந்தும் கூட அதற்கான எவ்வித நடவடிக்கைகளும் ஏன் இன்னும் எடுக்கப்படவில்லை ?

கடந்த 2022 ஆம் ஆண்டு இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சேவிற்கு எதிராக காலி முகத்திடலில் நடைபெற்ற போராட்டத்தின்போது ஒரு பதாகையில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது.

Who is Lasantha? Look Around, He is everywhere !!






நாச்சியாதீவு பர்வீன்

# விநோதக் கனவு சிறுவர்கள் காண வேண்டிய கனவு

-பஸ்லி ஹமீட்-

நாங்கள் சிறு வயதில் தாத்தா, பாட்டி அல்லது முதியவர்களிடம் கதை கேட்டு வளர்ந்தவர்கள். பாடசாலையில் முதல் அடி எடுத்து வைத்த போது அங்கும் ஆசிரியர்கள் முதலில் எமக்குக் கதைகளையே சொல்லித்தந்தார்கள். கதை கேட்டல் எம்மைச் சிந்திக்கத் தூண்டியது. எம்முள் பலவிதக் கற்பனைகளைத் தோற்றுவித்தது. தாத்தா, பாட்டி கதை சொன்ன போது எமது மனங்களும் அக்கதைகளோடு ஒன்றிப் பயணித்தன. அன்று வெகுஜனத் தொடர்பு ஊடகங்கள் மிகக் குறைவாகவே இருந்ததால் நாம் இவ்வாறான கதை களினூடாகவே ஒரு கற்பனை உலகிற்குள் சென்று வந்தோம். இந்தக் கதை கேட்டலின் அடுத்த கட்ட நகர்வாகவே நாம் சுயமாகப் புத்தகங்களிலிருந்து கதைகளை வாசிக்கத் தொடங்கினோம். ஆனால் இன்றைய சிறார்களின் நிலைமை வேறுவிதமாக உள்ளது. அவர்கள் தாத்தா, பாட்டிகளிடம் கதை கேட்பதில்லை. அவர்களை மாய உலகிற்குள் அழைத்துச் செல்வதற்கு இன்று ஏராளமான ஊடகங்கள், கருவிகள் தோன்றியிருக்கின்றன.

இப்படிப்பட்ட ஒரு காலகட்டத்தில் ரகீப் அல் ஹாதி போன்ற சிறுவர்கள் வாசிப்பில் மேலோங்கி அதனூடாகத் தமக்குள் கதை சொல்லும் ஆற்றலையும் வளர்த்துக்கொண்டிருப்பது அவரை சற்று அண்ணார்ந்து பார்க்கவே வைத்துள்ளது. அவரது கதைகள் இயல்பாக இருக்கின்றன. இதனால் அவை சிறுவர்களின் மனங்களை நிச்சயம் கவரும், அவர்களைச் சிந்திக்கவும் தூண்டும் என்பதில் சந்தேகமில்லை.

விநோதக் கனவு நூலில் 40 பக்கங்களில் 8 கதைகள் உள்ளன. இந்த எட்டுக் கதைகளிலும் ரகீப் அல் ஹாதி தனது எழுத்துத் திறமையை வெளிப்படுத்தியுள்ளார். எவ்வாறு கதை சொல்ல வேண்டும் என்பதை அவர் அறிந்து வைத்திருக்கின்றார். எந்தெந்தக் கோணங்களிலிருந்து கதை சொன்னால் அது சிறார்களைச் சென்றடையும் என்ற உத்தியைத் தெரிந்து வைத்திருக்கின்றார். இதனை அவரது முதலாவது கதையான விநோதக் கனவு என்ற கதையில் அற்புதமாக வெளிப்படுத்தியிருக்கிறார். தனது கையால் உடைந்த விளையாட்டுப் பொருட்கள் கனவில் வந்து தன்னை அச்சுறுத்துவது போன்ற கதை, கதையின் அமைப்பு பிரமாதமாக உள்ளது. இக்கதை நிச்சயம் சிறுவர்களை ஈர்க்கும் என்பதில் சந்தேகமேயில்லை. சில கதைகளைப் விலங்குகளைக் கொண்டு சொல்லியிருக்கிறார். இன்னும் சில கதைகளை வயதில் பெரியவர்களைக் கொண்டு சொல்லியிருக்கிறார்.

ஒரு கதை சொல்லிக்கு சொற்களின் பரிச்சயம் மிகவும் அவசியம். அத்தோடு தேவையானபோது எடுத்துப் போடுவதற்குக் கைவசம் தாராளமாகச் சொற்கள் இருக்க வேண்டும். ரகீபிடம் சொற்களுக்குப் பஞ்சமில்லை. ரகீபின் உரைநடை மிகவும் நேர்த்தியானது. பொருத்தமான இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்துள்ளார். எந்தவிதத் தங்குதடையுமின்றி ஒவ்வொரு கதையையும் தன்பாட்டுக்குச் சொல்லிக் கொண்டு செல்கிறார். ஒரு சிறந்த சொற்களஞ்சியம் அவரிடத்தில் உள்ளது.

"திடீரென குகையே அதிரும் வகையில் சிங்கம் கர்ச்சிக்கும் சத்தம் கேட்டது. அது சிங்கத்தின் குகை என்பது அப்போதுதான் எலனுக்குப் புரிந்தது. சட்டென்று வெளியில் பாய்ந்த எலன் மீண்டும் ஓட ஆரம்பித்தது. வீட்டுக்குச் சென்றுவிடலாம் என்று எண்ணும்போதே எங்கிருந்தோ இருந்து வந்த வேட்டைக்காரனின் அம்புக்கு எலன் பரிதாபமாகப் பலியானது. தாய் சொல்லை மீறிய எலன் பலனை அனுபவித்தது. சிறியவர்கள் எப்போதும் பெரியவர்களின் பேச்சை கேட்டு மதித்தால் என்றும் நன்மை பெறலாம்." என்று முடியும் "தாயை ஏமாற்றியதன் பலன்" என்ற கதையின் மென்மையான, இனிமையான வசனங்களைப் போன்றே அடுத்த கதைகளிலும் ரகீபின் வசனங்கள் விரிந்திருக்கின்றன.

ரகீபின் கதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான செய்திகளை சிறார்களுக்குச் சொல்கின்றன. அவை புத்திமதி கூறுகின்றன, தவறான செயல்களை விட்டும் சிறார்களைத் தடுக்கின்றன, சுயநலம் வேண்டாம் என்கின்றன. ஒற்றுமையின் அவசியத்தை




வழியுறுத்துகின்றன. ரகீப் ஒரு சிறுவனாக இருப்பதனால் இவையனைத்தும் சிறுவர்களால் விளங்கிக் கொள்ளத்தக்க விதத்திலேயே சொல்வதற்கு அவருக்கு இலகுவாக இருந்திருக்கிறது. அவர் தேர்ந்தெடுத்திருக்கும் கதாபாத்திரங்களும் அவற்றுக்கு வைத்திருக்கும் பெயர்களும் சிறுவர் மனங்களில் பதியும்படியாக உள்ளன.

பொருத்தமான அட்டைப்படமும் பளிச்சென்று மினுமினுங்கும் வெள்ளைத்தாள்களில் நேர்த்தியான அச்சுப்பதிப்பும் நூலை மெருகேற்றுகின்றன. உள்ளே தேவையான இடங்களில் படங்களைப் பிரசுரிதத்திருப்பதும் சிறுவர்களின் விருப்பத்திற்குரியதாய் உள்ளது.

விநோதக் கனவு எல்லாச் சிறுவர்களினாலும் வாசிக்கப்பட வேண்டிய ஒரு நூல் என்று தயங்காமல் சிபாரிசு செய்யலாம். நீங்கள் உங்கள் சிறிய மகனுக்கு அல்லது மகளுக்கு இந்நூலைப் பரிசளிக்கலாம். ரகீப் அல் ஹாதியைப் போன்று எல்லாச் சிறுவர்களும் தங்களது அன்றாட நாட்களில் வாசிப்பதற்கென்று ஒரு நேரத்தை ஒதுக்க வேண்டும். ஒரு நல்ல கதையை வாசிக்கும் போது அடுத்து என்ன நடக்கும்? என்ற எண்ண அலைகள் மனதிலே தோன்ற ஆரம்பிக்கின்றன. இது இப்படி நடக்குமா? அல்லது அப்படி நடக்குமா? என்ற அனுமானங்களைத் தோற்றுவிப்பதுடன் கற்பனைத் திறனை வளர்க்கவும் செய்கின்றது. அத்தோடு புதிய சிந்தனைகளையும் தோற்றுவிக்கின்றது. ஒவ்வொரு வீட்டிலும் சிறுவர்களுக்கு வாசிப்பதற்கான சூழலை அமைத்துக் கொடுப்பது பெற்றோரின் கடமையாகும்.

## பசியோடிருப்பவன் ரொட்டித்துண்டில் கடவுளைக் காண்பான்

- மகத்மா காந்தி-

# புதிய பாலஸ்தீன விடியலில்

கலங்காதே காசா..
அகில தெருக்களில்
இஸ்ரேயேல் சிறைகளில்
மேலைக்கரையில் அகதியாய்
அலைகிற
பாலஸ்தீனிய 'உம்மத்'
ஓங்கி ஒலிக்கிற விடுதலைப்
பாடலும்
எஞ்சிய போர்வாளும் நீ அல்லவா.

காசா இனி உன் பிள்ளைகள்
இடிபாடுகள் விலக
உயித்தெழுவார்கள்.
குழந்தை கொல்லும் கொடியவர்
உலகில்
நொருங்கி எரிகிற ஊர்கள் மத்தியில்
நெருப்பை அணைத்து புகையை
விலக்கி
ஆறுதலாகுமுன் மேலைக்
காற்றையும்
தோழமையோடு கண்ணீர்
துடைத்து
இரத்தக் கறைகளை கழுவி
நீராட்டும்
தாய்க் கடலையும் வாழ்த்துகிறேன்.

உலகம் இனியும் வேடிக்கை
பார்க்காது..
செங்கடலில் சுனாமிகளாக
நாங்கள் வருகிறோம்
லெபனான் 'லிற்றானி' நதியைக்
கடந்து
எரிமலை கனலும் கவண்கள் சுழல
தாவீதுகளாக நாங்கள் வருகிறோம்.
கோலியாத்தின் இரும்பு கவசம்
பொய்த்தது.

காசா
உனக்காக உலகம் ஊர்வலம்
கிழம்புது.,
இனி யோர்டான் நதிக்கும்
மத்திய கடலுக்கும் நடுவே
ஒரு புதிய வரலாறு
உருவாக்கப்படும்,
இனி உன் 'உம்மத்'
காசாவை சூழ்ந்த இருளின்
கருமையும்
காசாவில் எழுகிற விடியலின்
வெண்மையும்
காசா சிந்திய குருதியும் தோய்ந்த
மூவர்ணக் கொடிகளுடன் எழும்.

உனது கொடி பலஸ்தீனர்களுக்கு
மட்டுமல்ல
யூதர்களுக்கும்கூட நிழல் தரும்
அல்லவா?.
அதற்காகத்தானே உனது 'உம்மத்'
எழுதசாப்தங்கள் போராடியது.

என்னைப்போல
ஒடுக்கும் போரை உதைத்தெழுந்த
உலக கவிஞர்கள் சார்பாக
பாடுகிறேன்.
வாழிய காசா, மானுடம்
வெற்றியென
மூவர்ணக் கொடி உயர்த்தி
மீண்டெழுக பாலஸ்த்தீனம்

உம்மத்- கூட்டம்ஃசமூகம்.

- வ.ஐ.ச.ஜெயபாலன்-







வடுகொடை பிரதேசத்தை மையப்படுத்தி வடுகொடை ஸர்கார் நலன்புரிச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 2022 சாதாரன தரப் பரீட்சை, 2023 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் 100 மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவ, மாணவிகளை கௌரவப்படுத்தி அவர்களுக்கு பரிசில்களும் பாராட்டுகளும் அண்மையில் வடுகொடை இமாம் ஜெம்ஸ் மைதானத்தில் நடைபெற்ற போது பிரதம அதிதிகளாக வருகை தந்த நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி ஓய்வு பெற்ற ஆசிரியை முபஷ்ஷிரா ஹஸன், சீனன் கோட்டை ஆரம்பப் பாடசாலை பிரதி அதிபர் முர்ஷிதா ஹஸன் அவஉகளையும், கலந்து கொண்ட அதிதிகளையும், பெற்றோர்களையும், செயலாளர் முஸ்தாக் ஹஸன் அவர்களிடமிருந்து சான்றிதழ் பெறும் ரிம்ஸான் முஹம்மத் அவஉகளையும், பரிசில்கள் பெற்ற மாணவர்களையும், படங்களில் காணலாம்.

(பேருவளை பீ. எம். முக்தார்)

# குன்றும் குழியுமாக காணப்படும் பதுளை நகரத்தின் பாதைகள்

(எம்.கே.எம்.நியார்)

இலங்கைக்கு அந்நியச் செலாவணியை அதிகமாக பெற்றுக் கொடுக்கும் முக்கிய துறைகளில் ஒன்றான உல்லாச பிரயாணத் துறைக்கு, உல்லாச பயணிகளை கவர்ந்த மாகாணமான ஊவா மாகாணத்தின் தலை நகரான பதுளை நகரத்தின் மத்தியில் காணப்படுகின்றன பாதைகள் குன்றும்,குழியுமாககவும், கரடுமுரடாகவும் மிக நீண்ட காலமாக திருத்தம் செய்யப்படாமல்



காணப்படுவதால் மக்கள் மிகுந்த கஷ்டங்களை எதிர் நோக்குகின்றனர். மழைக்காலங்களில் நகரத்தில் நடந்து செல்ல கூட முடியாத நிலை. இதனால் உயர்தர பரீட்சை எழுதும் மாணவர்களும்,இயற்கை எழிலை பார்த்து ரசிக்க வரும் உல்லாச பிராணிகளும்.மிகுந்த அசௌகரியத்தை எதிர் நோக்குகின்றனர் இவ்வளவிற்கும் மாகாண சபை,மாவட்ட செயலகம், ஆளுநர் அலுவலகம்,மாவட்ட வைத்தியசாலை, பொலிஸ் நிலையம் என இன்னோரன்ன முக்கிய இடங்கள் இதன் மத்தியிலேயே காணப்பட்டும் அதிகாரிகள் அசமந்தப் போக்காக இருப்பதாக மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

# நூற்றாண்டை கொண்டாடவுள்ள

## அல்-பாஸியத்துல் நஸ்ரியா முஸ்லிம் பாலிகா



(பேருவளை பீ எம் முக்தார்)

இலங்கையின் முதலாவது முஸ்லிம் மகளிர் கல்லூரியான பேருவளை, மருதானை அல் - பாஸியத்துல் நஸ்ரியா முஸ்லிம் பாலிகா மகா வித்யாலயம், 2024 ஆம் ஆண்டு அதன் நூற்றாண்டை கொண்டாடவுள்ளது.

அதன ஆரம்ப நிகழ்வாக அதன் உத்தியோகப்பூர்வ இலச்சினை (லோகோ) வெளியீட்டு விழாவும் முன்னால் அதிபர்கள் ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வும் அதிபர் மஸ்னவியா ரிப்கான் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் களுத்துறை வலய மேலதிக கல்வி பணிப்பாளர் சுரஞ்சி கருணாதுங்க பிரதம அதிதியாகவும முன்னால் அதிபர் திருமதி ஹம்ஸா ஆரிப் கௌரவ அதிதியாகவும் களுத்துறை பிரதிக் கல்வி பணிப்பாளர் எஸ் ஜெயகுமார் களுத்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்டீ. எம் இல்யாஸ் பேருவளை கோட்டக் கல்வி பணிப்பாளர் டப்லியு.ஏ.ஜே. யூ சோமரத்ன, முன்னால் ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர் அல்ஹாஜ் ஏ.டப்லியூ. எம் அஜ்வாத், தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் கலாநிதி நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் , சமூக சேவையாளர் ஜாபிர் மொஹம்மத் ஹாஜியார், முன்னால் அதிபர் எம் ஹுஸாமுத்தீன் ஆகியோர் விஷேட அதிதிகளாகவும் ஊர் பிரமுகர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க மற்றும் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் நலன்விரும்பிகள் , பெற்றோர்கள் உட்பட முன்னால் ஆசிரியர்கள் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## மனநலமும் ஆலோசனையும் 14

# மதிப்புடன் வாழும் கணவன் மனைவி

மற்றவர் எங்களில் இருந்து வேறுபட்டிருந்தாலும், ஏதேனும் காரணங்களால் நாங்கள் அவருடன் உடன்படாவிட்டாலும் அவர்களை மதித்து கௌரவமாக நடந்து கொள்வது மிகவும் உயர்ந்த மனிதக் குணமாகும். இந்த மதிக்கும் தன்மையானது மரியாதை, நம்பிக்கை, பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு போன்ற உணர்வுகளை உருவாக்குகிறது. மதிக்கும் தன்மை என்பது இயல்பாக வரக்கூடியதல்ல. நாங்கள் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான ஒரு திறன். திருமண வாழ்வில் கணவனும் மனைவியும் இந்த திறனை கட்டாயம் கற்றுக் கொள்ள வேண்டும்.

கணவன் மனைவியின் தூய்மையான காதல் அழகான திருமணத்தின் அடித்தளமாக இருப்பது போன்று இருவருக்கும் இடையிலான மதிப்பு அதன் மூலக்கல்லாக இருக்கிறது. இருவருக்கும் இடையே மதிக்கும் தன்மை இல்லாவிட்டால் நம்பிக்கை, புரிதல், தொடர்பு, அர்ப்பணிப்பு போன்ற தூண்கள் சிதைந்துவிடும். தூண்கள் சிதைந்து போனால் கட்டிடத்தின் நிலை என்னவாகும் என்பது எமக்குத் தெரியும்.

கணவன் மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளும் மதிப்பு பல நேரங்களில் அன்பைக் காட்டிலும் முக்கியமானதாக இருக்கும்.

மண வாழ்வில் புயல் வேகமாகவும் பயங்கரமாகவும் இருக்கும் காலங்களில் எல்லாம் திருமண உறவின் சாரத்தை அப்படியே வைத்திருக்கும் அபார சக்தியை கொண்டதாக இருப்பது இந்த மதிக்கும் தன்மை.

மகிழ்ச்சியான திருமணத்திற்கான அடுத்த படி காவியங்களில் வரும் விசித்திரமான திருமணக் கதைகள் போல எங்கள் திருமணம் ஆகிவிடும் என்ற பிழையான எதிர்பார்ப்புகளை விட்டுவிடுவதாகும். அவ்வாறே, திருமணக் கட்டிடம் உறுதிபெற இருவருக்கும் இடையே கபடமற்ற காதல் இருந்தால் மட்டுமே போதும் என்ற சின்னத்தனமான நம்பிக்கை வராமல் மனதைப் பாதுகாத்துக் கொள்வதுமாகும்.

ஒவ்வொரு இரவிலும் பௌர்ணமி இருக்காது என்பதையும் ஒவ்வொரு நாளிலும் வானவில் வருவதில்லை என்பதையும் நாம் புரிந்து வைத்திருக்கிறோம். மணவாழ்வில் பேரின்பத்தின் தருணங்களும் மன அமைதியின் சுகங்களும் வருவது போன்று போராட்டங்களும் சந்தேகங்களும் அவ்வப்போது வராமல் இல்லை. சில சமயங்களில், அந்த போராட்டங்களே கணவன் மனைவியின் அழகான பிணைப்பின் ஆழத்தை உணர்த்தும் தருணங்களாக அமையலாம். திருமணத்தின் மிகப்பெரிய வெற்றி இந்த தருணங்களை இருவரும் சரியாகப் புரிவதைப் பொறுத்தும் இருக்க முடியும்.

கணவன் மனைவி இருவரும் மதிப்புணர்வுடன் இருப்பதென்வது இருவரின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதாகும். அவர்களின் கருத்துக்கள், யோசனைகள், தேவைகள் மற்றும் விருப்பங்களை ஒப்புக்கொள்வதாகும். அவர்களுக்கு இடம் கொடுப்பதுமாகும். அவரவர் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் போது முரட்டுத்தனமாக, கேலியாக அல்லது அவமரியாதையாக நடந்த கொள்வது போன்ற அனைத்து முரணான நடத்தைகளுக்கும் முற்றுப்புள்ளி விடப்படும். அதற்கு பதிலாக கண்ணியம் வெளிப்படும். கௌரவமான உறவு உருவாகும்.

நாங்கள் எப்படி நடத்தப்பட வேண்டும் என்று விரும்புகிறோமோ அவ்வாறே தன் திருமண பங்குதாரரும் நடத்தப்பட வேண்டும் என்று விரும்பும் நிலை உருவாகும்.

ஒருவரையொருவர் மதிக்கும் உயிரிய குணத்தையும் ஒற்றுமையின் சிறந்த பிணைப்பையும் ஒன்றாக பயணிப்பதன் அவசியத்தையும் ஒருபோதும் தவறவிடாமல் ஒன்று போல் சிந்தித்து ஒன்று போல் எதையும் சந்திக்கும் தம்பதிகளாக இருந்தால் ஆட்டம் காணாத கட்டிடம் போல் மணவாழ்வு உறுதி பெறும்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# போதைப் பொருளால் இளம் சந்ததியினரின் ஆளுமை அழிக்கப்பட்டு மூடமாக்கப்படுகின்றனர்





(எம்.எஸ். அமீர் ஹுஸைன்)

போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாவதில் இருந்து ஒவ்வொரு பிள்ளையையும் பாதுகாத்துக் கொள்வதில் ஒவ்வொரு பெற்றோரும் விஷேட கரிசனை காட்ட வேண்டும். நாட்டில் குற்றச் செயல்கள் பெருகுவதற்கும் பெருமதி மிக்க இளத் சந்ததியினரின் ஆளுமை சிதைக்கப்பட்டு அவர்கள் நடைப் பிணங்களாக மாறவும் பொதைப்பொருள் பிரதான காரணமாகும். யுக்திய தேடுதல் நடவடிக்கை இந்த இளம் சந்ததியினரை பாதுகாப்பதற்காக ஆகும். அதனால் நாட்டில் இருந்து போதைப் பொருளை ஒழித்துக்கட்ட அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேகாலை பிராந்திய சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் வை.ஏ. லீலசன்வ கூறினார்.

மாவனல்லை சுகாதார பனிமனை கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற மாவனல்லை பிரதேச சமூக பொலீஸ் அங்கத்தவர்களுக்கான அறிவூட்டல் நிகழ்வில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மாவனல்லை பொலீஸ் பொறுப்பதிகாரி சமன் கலுஆரச்சி, பொலீஸ் அத்தியட்சகர் பிரதீப் வீரசேகர உட்பட சமூக பொலீஸ் (பிரஜா பொலிஸ்) அங்கத்தவர்கள் பலரும் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

பதில் பொலீஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் வழிகாட்டலில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற "யுக்திய" என்ற தேடுதல் நடவடிக்கை மூலம் நாட்டில் இயங்கிக் கொண்டிருக்கின்ற பிரபலமான போதைப் பொருள் விநியோகஸ்தர்கள் பலர் கைது செய்யப்பட்டு வருகின்றனர். கிராமங்கள் தோறும் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றன. இந்த தேடுதல் நடவடிக்கை காரணமாக தேடப்பட்டு வந்த பல மிக மோசமான குற்றவாளிகள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். நாட்டில் ஓரளவுக்கு போதைப் பொருள் விநியோகம் முடக்கப்பட்டு வருகின்றது. அதனால் ஒரு நேர பாவனைக்கான ஹிரொயின் ஒரு பெக்கட்ட 2500 ரூபாவில் இருந்து 7500 ரூபா வரை உயர்வடைந்திருக்கின்றது.

போதைப் பொருளுக்கு அடிமையானவர்களால் அது இல்லாமல் இருக்க முடியாது. போதைப் பொருளுக்கு பணம் இல்லாதபோது குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர் ஒவ்வொரு ஊரிலும் இருக்கின்ற இத்தகையவர்களால் அந்தந்த ஊர்களில் திருடுகின்றனர். வீடுகளை உடைக்கின்றனர். வழிப்பறி கொல்லை, கொலைகள் என்று எந்தவிதமான குற்றச் செயலையும் சர்வசாதாரணமாக செய்கின்றனர். அதனால் போதைப் பொருளில் இருந்து நாட்டை பாதுகாக்க சமூக பொலீஸ் அங்கத்தவர்கள் கூடுதலாக ஒத்துழைக்க முடியும்.

பொலீசாருக்கு தகவல் வழங்க வேண்டும். இப்போது பொதுமக்கள் அச்சமின்றி தகவல் வழங்கி வருகின்றனர். அதனால் தான் கொழும்பில் தேடுதல் நடத்தப்பட்ட போது தப்பிப்பதற்காக நுவரெலியா சென்றிருந்த மதுஷ் (ஹரக் கடா) இன் கும்பலை வளைத்துப் பிடிக்க முடிந்தது. அவர்கள் நுவரெலியாவில் இருந்து புறப்படும் போது பொலீசாருக்கு தகவல் வழங்கப்பட்டது. அவ்வாறே தொடர்ந்து பொலீசாருக்கு பொதுமக்களும் ஒத்துழைத்தால் நாட்டை போதைப் பொருளில் இருந்து மீட்டு இளம் தளைமுறையினரையும் பாதுகாக்க முடியும். அதற்காக தொலைபேசியில் அழைப்பவரை அடையாளம் காண முடியாத இரண்டு தொலைபேசி இலக்கங்களும் அறிமுகம் கெய்யப்பட்டிருக்கின்றது. 0718598800, 0718598832 ஆகியவையே அந்த தொலைபேசி இலக்கங்களாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

# பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாச புத்தகங்கள் வழங்கி வைப்பு





(அஷ்ரப் ஏ சமத்)

ஏ.ஜே.எம். முசம்மில் பவுன்டேசன் ஆதரவில் 28வது வருடமாக "காந்தா சவிய" பெண்கள் அமைப்பின் தலைவி பெரோஸா முஸம்மில் தலைமையில் கொழும்பு மாநகரில் குறைந்த வருமானம் பெறும் 1000 பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாச புத்தகங்கள், உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வு கொழும்பு மாநகர புதிய மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வுக்கு ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முசம்மில் மற்றும் பெரோசா முசம்மில் தலைமையிலான காந்தா சவிய உறுப்பினர்கள் பெற்றோர்கள், குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பாடசாலை மாணவ மாணவிகள், கலந்து கொண்டனர்.

கொழும்பு வாழ் பாடசாலை மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

# மர்ஹூம் தேசபந்து நஜீப் ஹாஜியார் ஞாபகார்த்த பாடசாலை கட்டிடம்





(எம்.எஸ்.எம்.முன்தஸிர்)

களுத்துறை மாவட்டத்தில் ஹொரண கல்வி வலயத்தைச் சேர்ந்த அட்டுலுகம அல்கஸ்ஸாலி தேசிய பாடசாலையில் தேசபந்து மர்ஹூம் முஹம்மத் நஜீப் ஹாஜியார் ஞாபகார்த்த மாடிக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

அட்டுலுகம பிரதேசத்தின் பிரபலமானதொரு பிரமுகராகவும் வழிகாட்டியாகவும் விளங்கிய பிரபல சமூக ஆர்வலரும் சேவையாளருமான மர்ஹூம் நஜீப் ஹாஜியாரின் குடும்பத்தினரால் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் தொடர்பான அத்திவாரக் கல் நாட்டும் வைபவம் அல் கஸ்ஸாலி தேசிய பாடசாலை வளவில் அண்மையில் இடம்பெற்றது. களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பௌத்த சமய கலாசார விவகார அமைச்சர் ரத்னசிறி விக்ரமநாயக, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் நிமல் சந்திரரத்ன, அதிபர், ஆசிரியர்கள் உள்ளிட்ட முன்னாள் மக்கள் பிரதிநிதிகளும் ஊர்ப் பிரமுகர்கள் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.








சம்மாந்துறை பிரிலியன்ட் பாலர் பாடசாலையின் வருடாந்த கௌரவிப்பு விழா சம்மாந்துறை சபூர் வித்தியாலய கேட்போர் கூடத்தில் பாடசாலையின் முகாமைத்துவ பணிப்பாளர் ஏ.எல்.சர்ஜூன் தலைமையில் வெகு விமர்சையாக அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரிலியன்ட் பாலர் பாடசாலையில் 2023 ஆம் ஆண்டு கல்வி கற்ற மாணவச் செல்வங்களுக்கு பரிசில்களும் சான்றிதழும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்நிகழ்வில் ப சம்மாந்துறை பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் தேசமானிய எம். எஸ் .எம். நவாஸ் பிரதம அதிதியாகவும், கௌரவ அதிதியாக சபூர் வித்தியாலயத்தின் அதிபர் எம்.பி.எம். சாபிர் கலந்து கொண்டார்.

(எம்.ஐ.எம்.அஸ்ஹர்)




# உலகிலிருந்து விடைபெறும் வரை: எழுத்தால் சிறந்ததை வெல்லுங்கள்!

**நப்லா ஸலாஹுத்தீன்**

**பயாஸா பாஸில்**

நப்லா ஸலாஹுத்தீன் நாவலப்பிட்டியை பிறப்பிடமாகக் கொண்டவர். வசிப்பிடம் கண்டி. தந்தை சலாஹுத்தீன். தாய் நஜியா. இவர் எழுத்து துறையை பின்னணியாக கொண்டவரல்ல. ஆனாலும் கல்வி, ஆற்றல், ஊக்குவிப்பு போன்றன இவரது பின்னணியில் அமைந்திருந்தது. இவரது கணவர் பஸ்லி பாரூக், ஒரு வைத்தியர். தற்போது நப்லா மூன்று பிள்ளைகளுக்கு தாயாக இருக்கிறார். மூவரும் மிகவும் சிறிய வயதை கொண்ட மகன்மார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை கம்பளை international school இலும் இன் மேற்படிப்பு வரை கண்டி பதியுத்தீன் மஹ்மூத் மகளிர் பாடசாலையிலும் கற்றுக் கொண்டார்.

Diploma in child phycology மற்றும் Diploma in pre school teacher training போன்ற மேலதிக கற்கைகளை பூர்த்தி செய்த இவர், டீளஉ ைைளாலஉழடழபல பட்டப்படிப்பை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மூலம் கற்கையை தொடர்ந்து கொண்டும் இருக்கிறார்.




சிறுவயது முதலில் வாசிப்பின் மீதும் எழுத்தின் மீதும் ஆர்வம் கொண்ட இவர் பல பத்திரிகைகளிலும் எழுதி வந்துள்ளார். எழுத்து போட்டிகளிலும் பங்கு பற்றி உள்ளார். இதன் மூலம் இவரது ஊக்குவிப்பு வளர்ந்தது தன்னைத் தானே வளர்த்துக் கொள்வதில் இவர் பெரிதும் பாடுபட்டுள்ளார். இவரது பெற்றோரும் தனக்கு பக்க பலமாக இருந்துள்ளதாக இவர் தெரிவிக்கின்றார்.

கூடுதலாக கட்டுரை போன்ற ஆக்கங்கள் தான் சமூகத்திற்கு கொடுத்தும் உள்ளார். இன்னும் பல எழுத்துக்களை சமூகத்திற்கு கொடுக்க வேண்டும் என்று பேரார்வம் கொண்டவர். தனது எழுத்தின் மூலம் சமூகப் பணி புரிய வேண்டும் என்பதில் உறுதியாகவும் இருக்கின்றார்.

இவர் வெளியிட்ட முதல் நூல் "simple as that " இன்னும் நூலாகும். இதன் தமிழ் மொழிபெயர்ப்பும் "எளிதிலும் எளிது" எனும் பெயரில் கிடைக்கப்பெறுகின்றது. இதனை மொழி பெயர்த்தவர் அரும்பு ஆசிரியர் ஹாபிஸ் இஸ்ஸதீன் அவர்கள்.

இந்த நூலில் முஸ்லிம் பெண்கள் எதிர் நோக்கும் சவால்கள் அவர்களது குடும்ப வாழ்க்கையின் அடித்தளங்கள் பற்றி பூரண விளக்கமும் தெளிவும் அழகாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

சிறுவர் கதை புத்தகங்களாகிய "hajara counts her blessings" மற்றும் "The crown and the robe" போன்ற அழகிய புத்தகங்களை சிறுவர்களுக்காகவென்றே சமூகத்திற்கு கொடுத்துள்ளார்.

அவரது புதிய படைப்பாக " The hadees nest" புத்தகம் விளங்குகிறது இது முஸ்லிம் சிறார்களுக்கான மார்க்க பயிற்சி வழிகாட்டி நூலாக அமைந்துள்ளது. இதன் தமிழ் வடிவமும் "ஹதீஸ் பேழை" என்னும் பெயரில் வெளிவந்துள்ளது.

## வெந்நீர் வைத்தியம்

- சுக்கு கலந்து வெந்நீரை அடிக்கடி குடித்து வந்தால் வாயுத்தொல்லை விலகும்.
- வயிற்றுப்புண்ணால் ஏற்படும் வலியை குறைக்க மிதமான சூட்டில் வெந்நீரைக்குடித்தால் எளிதில் ஜீரணம் ஆகும்.
- ஒரு தேக்கரண்டி பார்லி வேகவிட்டு வெந்நீரை அடிக்கடி குடித்தால் சருமம் மிருதுவாகும்.
- தாகம் எடுத்தால் பச்சை தண்ணீரை குடிக்காமல் பொறுக்கும் சூட்டில் வெந்நீரைக் குடித்து வந்தால் உடம்பில் உள்ள வேண்டாத கழிவுகள் வெளியேறும்.
- சாப்பிடுவதற்கு அரை மணி நேரத்துக்கு முன்னர் ஒரு டம்ளர் வெந்நீர் குடித்து வந்தால் உடல் எடை குறையும்.
- அடிக்கடி வெந்நீர் குடித்தால் அஜீரணத்தால் ஏற்படும் தலைவலி நீங்கும் வெந்நீர் இரத்தத்தில் உள்ள நஞ்சையும் வெளியேற்றும்



## டிப்ஸ்... டிப்ஸ்...

- தேங்காயை சரிபாதியாக உடைக்க தண்ணீரில் நனைத்து பின்னர் உடைக்க வேண்டும்.

- வெங்காயம் வதக்கும் போது சிறிதளவு சர்க்கரை சேர்த்தால் எளிதில் வதங்கி விடும்.

- இனிப்புகள் தயாரிக்கும் போது சர்க்கரைக்கு பதில் வெல்லம் அல்லது தேன் ஏதாவது ஒன்றை பயன்படுத்தினால் சுவை கூடுதலாக இருக்கும்.

- பச்சை மிளகாய் ஒரு மாத காலத்திற்கு மேலாக கெடாமல் இருக்க ஒரு காகித கவரில் சிறிய துளையிட்டு கவரில் பச்சை மிளகாய் களை போட்டு ஃப்ரிட்ஜில்

- ஊறுகாய் தயாரிக்கும் போது கைகளை பயன்படுத்தக் கூடாது மரத்தினால் ஆன கரடிண்டிகளையே பயன்படுத்துங்கள்.

## ஆதம்பாவா நௌஷாத் அகில இலங்கை சமாதான நீதவனாக நியமனம்

(எம்.எஸ்.எம். ஸாகிர்)



சாய்ந்த மருதைச் சேர்ந்த ஆதம்பாவா நௌஷாத் அகில இலங்கை சமாதான நீதவனாக நியமிக்கப்பட்டுள்ளார். அண்மையில் கல்முனை மாவட்ட நீதிமன்றத்தில் நீதவான் முகம்மட் றியால் முன்னிலையில் இவர் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.


சாய்ந்தமருது 10ஆம் பிரிவைச் சேர்ந்த இவர், ஆதம்பாவா மற்றும் பரீதா தம்பதியினரின் மூத்த புதல்வராவார்.

தனது ஆரம்பக் கல்வியை றியாலுல் ஜன்னா வித்யாலயத்திலும், உயர் கல்வியை கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையிலும் கற்ற இவர், இலங்கை உயர் தொழில்நுட்ப கல்லூரியில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளமோ பட்டதாரியுமாவார்.




யுவதிகளுக்கு சுய தொழிலை மேம்படுத்தவும் இத்துறையில் டிப்லோமா சான்றிதழைப் பெறவும் ஆங்கிலக் கல்வியிலும் டிப்ளோமாவை பெற்றுக் கொடுக்கவும் யும்னா பிறைடல் அன் எக்டமி பிறைவேட்ட லிமிட்டட் நிறுவனம் கற்கை நெறிகளையும் செயன்முறை பயிற்சிகளையும் வழங்கி வருகின்றது. இந்த வகையில் பயிற்சிகளை முடித் கொண்ட சுமார் 60 யுவதிகளுக்கு டிப்லோமா சான்றிதழ் மற்றும் நினைவுச் சின்னங்கள் வழங்கும் நிகழ்வும் பிரைடல் ஷோ மஹிந்தி ஆர்ட் கேக் டெக்கரேஷன் கண்காட்சியும் மற்றும் பாண்டசி மேக்கப் போட்டி நிகழ்ச்சி என்பன யும்னா பிறைடல் நிறுவனத்தின் பணிப்பாளர் திருமதி சுமீரா பாஹிர் தலைமையில் பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (9) இடம் பெற்றது. (ஏ.எஸ்.எம்.ஜாவித்)






கொழும்பு - 07, ஜெயவர்தன மண்டபத்தில் நடைபெற்ற ஜனரஞ்சகப் பாடகர் கலைக்கமலின "கீத்ராத் - 60" மாபெரும் நிகழ்ச்சியில் கலந்து சிறப்பித்த சிங்கப்பூர் பிரபல இஸ்லாமிய கீத சிறப்பு பாடகர் ஃபரிஹுல்லாஹ்வை கலாபூஷணம் பரீட் இக்பால் பொன்னாடை அணிவித்து கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

## புலமையில் சித்தி

(ஐ.ஏ. காதிர் கான்)



கொழும்பு - 10, மருதானை, ஸாஹிரா கல்லூரியில் தரம் ஐந்தில் கல்வி கற்கும் அப்துல் முனாஃப் அப்துர் ரஹ்மான், இம்முறை (2023) வெளியான புலமைப்பரிசில் பரீட்சையில் 152 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர், மௌலவி அப்துல் முனாஃப் - பாஃதிமா ஸஃப்ரா ஆகியோரின் கனிஷ்ட புதல்வருமாவார்.




இரண்டாவது இலங்கை சமவேட் கிக் தேசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் 2023 போட்டியில் கண்டி மாவட்டத்தில் எம் பி யூசுப் முதலிடம் பெற்று தங்கப் பதக்கத்தை வென்றேடுத்தார். (சனூன்)




ஹெம்மாதகம மடுள்போவ எம். எச்.பி .ஸீ. நலன்புரியினரின் ஏற்பாட்டில் இரத்ததான முகாமொன்று ஓலானைத் தக்கியாவில் அண்மையில் நடைபெற்றது. "வாழ வைத்து வாழ்வோம் என்ற தொனிப் பொருளில் கேகாலை வைத்திய சாலையின் ஒத்துழைப்போடு சாமசிரி தேசிய கீர்த்தி எம். எச்.எம். முஸம்மில் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ் இரத்ததான நிகழ்வில் நலன் விரும்பிகள் பலரும் கலந்து சிறப்பித்தனர். (பாரா தாஹீர்)

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.